விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 28 சனிக்கிழமை (13.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269




## ★ எங்களை விட்டு எங்கே போகின்றீர்கள்? ★

# தொண்டு நிறுவனங்களை வழிமறித்து வன்னியில் பொதுமக்கள் முற்றுகை

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் கட்டாயப் பணிப்பின் பேரில் வன்னியிலிருந்து அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் வெளியேறும் நிலையில், மக்கள் அவர்களை முற்றுகையிட்டுத் தடுத்துள்ளனர். பொது மக்களின் முற்றுகையினால் தொண்டு நிறுவனங்கள் செய்வதறியாதுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்னியில் தொடர்ந்து இயங்கும்

(கொழும்பு)

வன்னியில் இருந்து சர்வதேச நிறுவனங்கள் அனைத்தும் விலகிச்சென்றுள்ள போதிலும், அனைத்துலக செஞ்சிலுவை சங்கம் மாத்திரம் தொடர்ந்தும் ஓமந்தை சோதனைச் சாவடியிலும் அதேநேரம் வன்னி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் தமது பணிகளைத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் வன்னியில் இருந்து அரச சார்பற்ற அமைப்புக்களை வெளியேறக் கோரியதன் பின்னர் இதற்கான உடன்பாடு நேற்று ஏற்பட்டதாக (12 ஆம் பக்கம் பார்க்க)






வன்னியில் தொண்டு நிறுவனங்களை வழி மறித்துப் பொதுமக்கள் முற்றுகையிடுவதையும் அவர்களால் தொண்டு நிறுவன வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

## கப்பூது உப்புவெல்ல வீதியில் வெட்டுக் காயங்களுடன் சடலம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கப்பூது உப்புவெல்ல வீதி உடைந்த பாலத்தடியில் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்ட காயங்களுடன் அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 35-40 வயது மதிக்கத்தக்க கறுத்த திடகாத்திரமான உடலமைப்புடைய 'பொன்டிங்' தாடி, மீசை, கட்டையாக முடிவெட்டிய 5 அடி உயரம் கொண்ட வெள்ளை நீல நிறம் கலந்த சாரம் அணிந்த ஒருவருடைய சடலம் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கடந்த 3 தினங்களுக்கு முன் காணாமல் போயி (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இரு யுத்த விமானங்களையும் செலுத்தியவர்கள் வெளிநாட்டவர்களா?

(கொழும்பு)

வவுனியாப் படைத் தலைமையகம் மீது விடுதலைப்புலிகள் விமானத் தாக்குதல் நடாத்திய சமயம் புலிகளின் விமானத்தைச் செலுத்திச் சென்றவர்கள் வெளிநாட்டு விமானிகளாக இருக்கலாம் எனும் சந்தேகம் பாதுகாப்புத் தரப்பினருக்கு எழுந்துள்ளதாக டெய்லி மிரர் பத்திரிகையின் பாதுகாப்பு ஆய்வாளர் சுனில் ஜெயசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் படை விமானங்கள், புலிகளின் விமானத்தைப் பின்தொடர்ந்து சென்று தாக்குதல் நடாத்திய சமயம் புலிகளின் விமானங்கள் கடல் மட்டத்திற்குத் தாழப் பறந்து சென்றதாகவும் சுப்பர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து 2 இலட்சம் மக்கள் வவுனியாப் பிரதேசத்திற்குள் வரலாம்

### நிலைமையை சமாளிக்க நேற்று விசேட மாநாடு

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் மோசமடைந்து செல்லும் போர்ச் சூழல் காரணமாக அங்கிருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாவுக்கு 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம் மக்களை வவுனியாவில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று வவுனியா செயலகத்தில் வவுனியா மாவட்ட பதில் அரசாங்க அதிபர் நீக்கிலஸ் பிள்ளை தலைமையில் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண முகாமைத்துவ அமைச்சின் தேசிய திட்ட இணைப்பாளர் பிரிகேடியர் வி.கே.பி. வீரக்கோன், (12 ஆம் பக்கம் பார்க்க)

## காலியில் துப்பாக்கிச் சூடு மூன்று கைதிகள் உயிரிழப்பு

(கொழும்பு)

காலிச் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மூன்று கைதிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் இருந்த சிலர் தப்பிச் செல்ல முற்பட்ட போது சிறைச்சாலை அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிர (12 ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு

(C-1514)

# இலங்கையின் கூலிப் படையாக இந்தியப் படை செயற்படுகிறது

## வை.கோபாலசாமி சீற்றம்

(சென்னை)

இலங்கையில் இராணுவத்துக்கு உதவியாக இந்திய இராணுவ வீரர்கள் மற்றும் பொறியியலாளர்கள் கடமையாற்றுவது தற்பொழுது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது மத்திய அரசு தமிழ் மக்களுக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். இலங்கையில் பசி பட்டினியால் தமிழர்கள் வாடுகின்றனர்.

ஆனால் இந்தியா, இராணுவ வீரர்கள் மற்றும் இராணுவ தொழில்நுட்ப பொறியியலாளர்கள் ஆகியோரை இலங்கைக்கு அனுப்பி உள்ளது. இவர்கள் இலங்கை அரசின் கூலிப் படையாக செயற்படுகின்றனர் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

அண்மையில் வவுனியா நகரிலுள்ள கூட்டுப்படை தலைமையகம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் இரு இந்திய பொறியியலாளர்கள் காயமடைந்த சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே வைகோ இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த 8 ஆம் திகதி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வான்வெளித் தாக்குதலில் இலங்கையின் விமானப் படை ராடர் கருவி பலத்த சேதமுற்றது. இந்தத் தாக்குதலில் இந்திய இராணுவ பொறியியலாளர்களான ஏ.கே.தாகூ.சிந்தாமணி ரவுட் ஆகியோர் காயமடைந்தனர்.

இந்திய தூதரகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் கருத்து வெளியிடுகையில்; இலங்கை இராணுவத்துக்கு உதவியாக இந்திய இராணுவ பொறியியலாளர்கள் 265 பேர் இலங்கையில் இருக்கின்றனர் எனக் கூறியுள்ளார். இது தமிழர்களுக்கு மத்திய அரசு செய்யும் துரோகமாகும்.

இதற்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசே முழுக் காரணமாகும். இலங்கை இராணுவத்துக்கு இந்தியா உதவி செய்யக் கூடாது என்பதை வலியுறுத்தி தேவைப்படும் நேரத்தில் போராடுவோம். இலங்கைக்கு இந்தியா அளித்துவரும் உதவி பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் விரிவாக விளக்கி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம் என வைகோ தெரிவித்தார். (ந-5)

# வவுனியாவில் நேற்று இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா தனியார் விடுதியிலிருந்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட இளைஞன் நேற்று வீதியோரத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வவுனியா நகரில் அமைந்துள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு நேற்று பட்டாணிச்சூர் பகுதியில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் வவுனியா பொலிஸாரால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

# வலிகாமத்தின் கல்வி நலன் கருதி கல்விப் பணிப்பாளரை இடமாற்ற வேண்டாம்

## சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கோரி சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள் அவசர கடிதமொன்றை வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த 36 அதிபர்கள் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதத்தின் விபரம் வருமாறு,

எமது வலயக்கல்விப் பணிப்பாளர், மகாண கல்வி அமைச்சு செயலாளரினால் வடமராட்சி கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

கடந்த மூன்று வருடங்களாக எமது வலயத்தில் பணிப்பாளராக கடமையாற்றிய ப.விக்னேஸ்வரன் அவர்களின் கடுமையான உழைப்பால் கல்வியும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் அனைத்துத் துறைகளிலும் பாடசாலைகளின் அடைவு மட்டம் அதிகரித்து வருகின்றது.

பொது பரீட்சைகளின் பெறுபேறுகளில் இவ் வலயப் பாடசாலைகள் தொடர்ச்சியான அதிகரித்த வீதத்தினை பெறுகின்றன.


தமிழ்த்தினம், ஆங்கிலத்தினம் மற்றும் மாகாண, மத்திய அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சகல வேலைத்திட்டங்களிலும் விக்னேஸ்வரன் அவர்களின் தொடர்ச்சியான தூண்டுதல்களின் காரணமாக சிறப்பான இடங்களை வலிகாமம் வலயம் அடைந்து வருகின்றது.

விளையாட்டுத் துறையிலும் மாகாண மட்டத்தில் பெருமளவு முதன்மை வெற்றிகளை வலிகாமம் வலயப் பாடசாலைகள் பெறுவது தாங்கள் அறிந்ததே.

இதற்கும் கல்விப் பணிப்பாளரின் ஆக்கமும் ஊக்கமும் பாடசாலைகளிற்கு உந்து சக்தியாக திகழ்ந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக பாட ரீதியான கருத்தரங்குகளையும் பயிற்சிப் பரீட்சைகளையும் சிறப்பாக திட்டமிட்டு நடாத்தி அதன் பயன்களையும் மாணவர்கள் பெற வழிவகுத்துள்ளார்.

இன்னமும் சில வருடங்கள் எமது கல்வி வலயத்தில் விக்னேஸ்வரன் அவர்கள் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றினால்,



பெருமளவு இடம்பெயர்ந்த மாணவர்களையும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களையும் கொண்ட வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்கள் மேலும் சிறப்பான அடைவு மட்டத்தினை பெற முடியும் என சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

எனவே எமது பணிப்பாளரின் இடமாற்றத்தினை மீள் பரிசீலனை செய்து இவ் வலயத்தின் துரித வளர்ச்சிக்கு அவர் தொடர்ந்தும் பணி செய்யும் வாய்ப்பினை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# 300 வருட பழமை வாய்ந்த அரச மரம் சரிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாயிலில் அதன் அடையாளமாக 300 வருடங்களிற்கு மேல் நிமிர்ந்து நின்ற அரசமரம் நேற்று முன்தினம் காலை 7.55 மணியளவில் அமைதியாக சரிந்து விழுந்தது. இது பல்கலைக்கழக சமூகத்தை கவலையடைய வைத்துள்ளது.



படம்: யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல்துறைத் தலைவர் கலாநிதி நா.சிவயோகன் அவர்களால் எடுக்கப்பட்டது.

# பயனாளிகளுக்கு உயர் இன தென்னை நாற்றுக்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவையைக் கருத்தில் கொண்டு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டமானது கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவியுடன் லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 9 ஆயிரம் நல்லின விதை தேங்காய்களை தருவித்து பயனாளிகளிடையே பகிர்ந்தளிக்கின்றது.

இவற்றில் 2 ஆயிரம் எண்ணிக்கையானவை 3 வருட காலத்தில் கூடிய விளைச்சலைத் தரக்கூடிய இனமாகும்.

ஏனைய 7 ஆயிரம் எண்ணிக்கையானவை 5 வருடத்தில் பயன் தரக் கூடியவை. இதன் மூலம் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படுவதுடன் பயனாளிகளின் வாழ்க்கை மட்டமும் உயர்வடைந்து மாவட்டத்தின் உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தினால் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாகப் பயனாளிகளுக்கு பல்வேறு வகையிலான மரக்கன்றுகள் மற்றும் வீட்டுத் தோட்டம் செய்கை பண்ணப்படுவதற்குரிய பயிர் விதைகள் என்பவற்றை விநியோகித்தமை, பாடசாலைகள் மற்றும் பொது இடங்களின் காணிகளில் மலைவேம்பு போன்ற மரங்களை நாட்டியமை, வளங்களின் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு மூல வளங்களை திட்டமிட்ட வகையில் பயன்படுத்தும் வழி முறைகள், சுற்றாடல் வெப்பநிலை உயர்வு, தரைக்கீழ் நீரின் தரத்தை பேணல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவம் போன்ற விடயங்கள் சம்மந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. (ந)


## இரசாயனவியல் வகுப்புக்கள் கோப்பாயில் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| A/L | 2009 | PHYSICAL CHEMISTRY |
| A/L | 2010 | THERMO CHEMISTRY |

கந்தசுவாமி கோவில் அருகாமை
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

தொடர்பு :- 077 4351909

(C-1513)


# புலிகளுக்கு ஆதரவான மாநாட்டில் அமைச்சர் பிறவுண் பிரபு பங்கேற்பார்!

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாக எதிர்வரும் 15 ஆம் திகதி மிடில் செக்ஸில் நடைபெறவுள்ள மாநாட்டில் ஆசிய பிராந்திய வெளியுறவு அமைச்சர் மிலோச் பிறவுண் பிரபு கலந்து கொள்ள உள்ளதாக ஆங்கில இணையதளமொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரித்தானிய வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பில் மிலோச் பிறவுண் பிரபு நேரடியாகக் கருத்து தெரிவிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பிரித்தானிய தமிழ் மக்களுக்கு பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

மிலோச் பிறவுண் பிரபு, நாடாளுமன்ற உறுப்பினர் ரொபர்ட் ஏவன்ஸ் மற்றும் கிரெத் தொம்சன் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# இன்று ஒரு தகவல்

## ஏமாற்றாதே! ஏமாறாதே

இந்த உலகத்தில் ஏமாற்றுபவர்களை விட ஏமாறுபவர்கள் தான் அதிகம். ஒருவர் கடன் கொடுக்கிறார். இன்னொருவர் கடன் வாங்குகிறார். இந்த இருவரில் யார் கெட்டிக்காரர்?

இந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியாது. அந்தக் கடன் திரும்பி வருகிறதா இல்லையா என்பதை வைத்துத்தான் அதை முடிவு செய்ய முடியும். ஒரு பெரிய ராஜா இருந்தார். ஒரு நாள் வெளிநாட்டு வியாபாரி ஒருவர் அவரிடம் வந்தார்.

அவர் ஒரு குதிரை வியாபாரி. வெளியூர்களிலிருந்து நிறைய குதிரைகளெல்லாம் கொண்டு வந்தார். ராஜாவுக்கும் குதிரைகள் தேவைப்பட்டது. அதனால் "அப்படியே எல்லாக் குதிரைகளுக்கும் என்ன விலை சொல்கிறாய்?" என்று கேட்டார்.

வியாபாரியும் ஏதோ ஒரு விலை சொன்னார். "சரி" என்று சொல்லி அவர் சொன்ன விலை கொடுத்து எல்லாக் குதிரைகளையும் வாங்கிவிட்டார். அது மட்டுமல்ல, "இன்னும் குதிரைகள் இருந்தால் கொண்டுவா" என்றார்.

"மன்னா ! உங்கள் உத்தரவுப்படியே கொண்டு வருகிறேன். ஆனால் அதற்கு நான் பல தேசங்களுக்குப் போய் நல்ல ஜாதிக் குதிரையாக வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு கொஞ்சம் பணம் கொடுத்தீர்களானால் மிகவும் வசதியாக இருக்கும்." என்றார் அந்த வியாபாரி.

"அதனால் என்ன? எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டார் ராஜா. "இரண்டு லட்சம் ரூபா வேண்டும் "என்றார் வியாபாரி. உடனே அதை அவருக்கு கொடுத்தனுப்பும்படி உத்தரவிட்டார் ராஜா. வியாபாரியும் பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

ஒரு நாள் ராஜா தனது அமைச்சரைக் கூப்பிட்டார். "அமைச்சரே! நம் நாட்டில் யாருமே ஏமாந்து போய்விடக் கூடாது என்பது எனது கொள்கை. அப்படி யாராவது இருந்தால் அவர்களுக்குத் தகுந்த உதவியை நாம் செய்ய வேண்டும்.

நம் நாட்டில் ய்ார் யார் எந்தெந்த வகையில் ஏமாந்தார்கள், என்பதை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் "ஏமாந்தவர்கள்" பட்டியல் ஒன்று தயார் செய்து எடுத்துக் கொண்டு வாருங்கள்!" என்று உத்தரவிட்டார். அமைச்சரும் ராஜா கேட்டது போலவே, ஒரு பட்டியலை மூன்று நாட்களில் தயார் செய்து கொடுத்தார்.

ராஜா அந்தப்பட்டியலை வாங்கிப் பார்த்தார். அந்தப்பட்டியலில் முதலில் ராஜாவின் பெயர் தான் இருந்தது. அமைச்சரின் மேல் ஒரு மரியாதை இருந்தால் ராஜாவுக்கு கோபம் வரவில்லை.

"என்ன அமைச்சரே! ஏமாற்றுபவர்கள் பட்டியலில் முதலில் என் பெயரை எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "பின்னே என்ன? முன்பின் அறிமுகமில்லாத ஒரு குதிரை வியாபாரியிடம் அட்வான்சாக இரண்டு லட்சம் ரூபா கொடுத்தனுப்பியிருக்கிறீர்களே! இந்த நாட்டில் உங்களை விட ஏமாந்தவர்கள் வேறு யார் இருக்க முடியும்?"

அந்த ஆள் பணம் வாங்கிக் கொண்டுபோய் எவ்வளவு நாள்! இதுவரைக்கும் குதிரை வந்து சேர்ந்த பாடில்லை! இதற்கு மேலேயும் வந்து சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இருந்தாலும் யாரோ ஒருவனை நம்பி இவ்வளவு தொகையை கொடுத்து அனுப்பியது எந்த வகையில் புத்திசாலித்தனம்? இப்பொழுது அந்த ஆள் உங்களை ஏமாற்றி விட்டானா? இல்லையா? அதனால் தான் ஏமாந்தவர்கள் பட்டியலில் முதலில் உங்கள் பெயரை எழுதினேன்!" என்றார்.

ராஜா கொஞ்ச நேரம் யோசித்தார். "சரி! இப்பொழுது அந்த வியாபாரி குதிரைகளை கொண்டு வந்து விட்டான் என்றால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். "அப்படி நடந்தால், இந்த பட்டியலில் இருக்கின்ற உங்கள் பெயரை அழித்து விட்டு அவன் பெயரை எழுதிவிடுவேன்!" என்றார் அமைச்சர்

அதுவும் சரிதான். ஏமாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தும் அதை சரியாகப் பயன்படுத்த வில்லை என்றால்... அவனும் ஒரு ஏமாளி தானே! எது எப்படியிருந்தாலும் நாம் எச்சரிக்கையாக ஏமாந்து விடாமல் இருக்க வேண்டியது இந்தக்காலத்தில் மிகவும் அவசியமானது.

ஒரு நண்பனைத் தேடிப்போனேன். அவனைப் பார்த்து "எனக்கு உன்னை ஐந்து வருடமாகத் தெரியும். நீ மிகவும் நல்லவன். எனக்கு ஒரு நூறு ரூபாய் கடனாக கொடுக்க முடியுமா?" என்று கேட்டேன் "மன்னிக்க வேண்டும். நான் கடன் கொடுப்பது இல்லை!" என்றான் அவன்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன். அதற்கு அவ்ன் "எனக்கும் உன்னை ஐந்து வருடமாகத் தெரியும். அதனால் தான் கொடுக்க யோசிக்கிறேன்!" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசியல் இலாபம் கருதியே கச்சதீவை மீட்குமாறு தமிழக கட்சிகள் கோஷம்

## கச்சதீவு இலங்கைக்கே சொந்தம் என்கிறார் அமைச்சர் ரோஹித

(கொழும்பு)

நிகழ்காலத்திலும் எதிர்காலத்தி



லும் கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானதாகும். எமது கடற்பரப்பில் நுழைவதற்கு இந்திய மீனவர்களுக்கோ கடற்கலங்களுக்கோ உரிமை கிடையாது. சொந்த அரசியல் லாபம் கருதியே கச்சதீவினை மீட்குமாறு தமிழக அரசியல் கட்சிகள் கோஷமிடுகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

கச்சதீவினை மீளப்பெறக் கோரி தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வழக்கொன்றினைத் தாக்கல் செய்துள்ளார். வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் தீர்ப்பானது இலங்கை அரசாங்கத்தை எவ்வ்கையிலும் பாதிக்காது என்றும் அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்றத்தில் எம்.பிக்களுக்கான வாய்மூல கேள்வி நேரம் முடிவடைந்த பின்னர் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ரோஹித போகொல்லாகம மேலும் கூறியதாவது,

போர்த்துக்கேயர், ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே கச்சதீவின் உரிமை இலங்கைக்கு சொந்தமானதாக இருந்தது.

கச்சதீவில் நிரந்தர குடியிருப்பாளர்களும், நிரந்தரக் கட்டடங்களும் இல்லை. அங்கு ஒரேயொரு றோமன் கத்தோலிக்க தேவாலயம் உள்ளது. அது யாழ்.ஆயரினால் பரிபாலனம் செய்யப்படுகின்றது. தீவைச் சுற்றியுள்ள தீடைகளும், பாறைகளும் அதற்கு மேலும் சிறப்பளிக்கின்றன.

கச்சதீவு பிரச்சினை 1921இல் தோன்றியது. இரு நாடுகளும் மீன் பிடிப்பதற்கான எல்லையை பிரிக்க முற்பட்ட போது இப்பிரச்சினை பூதாகரமாக வெடித்தது.

1947ஆம் ஆண்டு 7ஆம் உறுப்புரையின் கீழ் பிரயாணப் பத்திரமின்றி இந்திய பக்தர்கள் கச்சதீவு திருவிழாவிற்கும், தேவாலயத்திற்கும் வரமுடியும். இந்திய வர்த்தகர்களும் அங்கு தமது நடவடிக்கையை மேற்கொள்ள உரிமை உள்ளது.

ஆனால் அங்கு இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கவோ, தீவில் தங்கியிருக்கவோ வலைகளைக் காய வைக்கவோ உரிமையில்லை என்று 1976ஆம் ஆண்டு உறுப்புரை கூறுகின்றது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் வருவதற்கும், இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பிற்குள் செல்வதற்கும் 1977ஆம் ஆண்டு உறுப்புரை தடைவிதிக்கின்றது. (அ-6)

# வன்னி மக்கள் எதிர்கொள்ளும் மனிதாபிமான பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரித்தானிய ஆளும் கட்சி எம்.பி.உறுதி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னி பெரு நிலப்பரப்பில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரிய மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பாக பிரித்தானிய அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுப்பேன் என பிரித்தானிய ஆளும் தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சைகானை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக பிரித்தானிய அரசாங்கம் கவலையடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைகளினால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விளக்கிக் கூறுவதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பிக்களான செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் லண்டனில் சைகானை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். இந்த சந்திப்பின்போது தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சைகானுக்கு விளக்கிக் கூறிய விடயங்கள் குறித்து கஜேந்திரன் எம்.பி கொழும்பு ஊடகமொன்றுக்கு தகவல் தருகையில்,

வன்னி பெரு நிலப்பரப்பிலிருந்து தமிழ் மக்களை முற்றாக அகற்றுவதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கம். அதற்காகவே பொது மக்களின் குடியிருப்புகள் மீது விமானம் மற்றும் ஆட்லறி ஏறிகணை தாக்குதல்களை இராணுவத்தினர் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்களை அனுப்பாது தடைவிதிப்பதாகவும் மக்களை வெளியேற்றுவதற்கான ஒரு கருவியாக உணவையும் மருந்து பொருட்களையும் அரசாங்கம் பயன்படுத்துவதாகவும் எடுத்துக் கூறியதாக கஜேந்திரன் எம்.பி.தெரிவித்தார்.

ஆகவே தமிழ் மக்களை இத்தகைய மனித அவலத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் எனவும் அதற்கு பிரித்தானியா உட்பட சர்வதேச நாடுகள் உடனடியாக உதவி புரிய வேண்டும் என வேண்டு கோள் விடுத்ததாகவும் தெரிவித்தார். இதே வேளை இதனை ஏற்றுக். கொண்ட சைகான் இந்த விடயங்கள் தொடர்பில் பிரித்தானிய அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறு தியளித்தார் என்று கஜேந்திரன் எம்.பி.தெரிவித்தார். (அ-6)

# இராசி பலன்

13.09.2008
(ஆவணி 28, சனிக்கிழமை)
அவிட்டம் முன்னிரவு 11.13 மணிவரை
திரயோதசி பிற்பகல் 3.34 மணிவுரை
இராகுகாலம்-09.03-10.33 மணிவரை
சுபநேரம்-03.03-04.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தொழில்லாபம், எடுத்த காரியம் கைகூடும், நல்லவர வேற்பு, போசனசுகம். |
| இடபம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, நன்கொடை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | உத்தியோக பங்கம், பிரயாணம், குடும்பக்கவலை, கட்டுப்பாடு. |
| கடகம் | பொருள் விரயம், அஜீரணக் கோளாறு,வாகனபயம், காரிய தடங்கல். |
| சிங்கம் | தெய்வசிந்தை, அபூர்வசந்திப்பு, குடும்பமகிழ்ச்சி, போசன நன்மை. |
| கன்னி | விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, நோய்குணமடையும், நண்பர்கள் உதவி. |
| துலாம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு, ரோக நிலை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| தனுசு | மனோதைரியம், சுவாரஸ்யம், காரிய அனுகூலம், போசன நன்மை. |
| மகரம் | எடுத்தகாரியம் தாமதமாகும், பொருள் விரயம், திடீர் நன்மை, விவாதம். |
| கும்பம் | தெய்வசிந்தை, போசனசுகம், புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | காரிய அலைச்சல், சோம்பல் நிலை, புத்திரரால் கவலை. |

வளவன்

# ஜே.வி.பி.யின் முன்னாள் எம்.பி. பொல்கம் பொல போலியான ஆவணங்களைப் பயன்படுத்தியுள்ளார்

## இரகசியப் பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அனுரத்த பொல்கம்பொல போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நபர் ஒருவரை ஜப்பானுக்கு அழைத்துச் சென்றமை அம்பலமாகியுள்ளதாக இரகசியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரிடம் இரகசிப்பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இந்த தகவல்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் கடிதத்தலைப்பில் மோசடியான முறையில் தனதுபிரத்தியேக செயலாளர் எனக்குறிப்பிட்டு ஒருவரை ஜப்பானுக்கு அழைத்துச் சென்றுள்ளார் என தெரியவருகிறது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும், குறித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக வழக்குத்தொடரப் படும் எனவும் இரகசிப்பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-6)

## யாழ்.மாவட்டத்தில் பால்மா விநியோகம்

யாழ். மாவட்டத்திற்கு அங்கர், லக்ஸ் பிறே ஆகிய முழு ஆடைப் பால்மா வகைகள் கப்பல் மூலம் தருவிக்கப்பட்டுள்ளது.

இதில் 400 கிராம் கொள்ளளவுடைய 1 இலட்சத்து 28ஆயிரத்து 670 லக்ஸ்பிறே பைக்கற்றுக்களும், 1 இலட்சத்து 54 ஆயிரத்து 404 அங்கர் பைக்கற்றுக்களும் அடங்கும். இவை பொதுமக்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு மாவட்டத்திலுள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒரு பைக்கற் லக்ஸ்பிறே 278 ரூபாவாகவும் அங்கர் 280 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுமெனவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் அதிபர் க.செல்வக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பிராந்திய முகாமையாளர் செ.சிவானந்தன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஆசியுரையை மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்களும் நினைவுப் பேருரையை யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பதில் பணிப்பாளர் கு.சாந்தகுமாரும் ஆற்றவுள்ளனர். பரிசில்களை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி கவிதா சிவானந்தன் வழங்குவார். (ஓ)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆங்கில பாடநெறி ஆசிரிய மாணவர்களினால் எழுதி தொகுக்கப்பட்ட 20 நாடகங்களைக் கொண்ட "Golden Plays" என்னும் நூல் கல்லூரி பிரதான மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளையும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையால் நடாத்தப்படும் ''ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்'' எனும் நிகழ்வு இம் மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் பொதுநூலகத்தில் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வருகையாளராக நூலாசிரியர் மூதறிஞர் சிவ.சரவணபவன் (சிற்பி) கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் இலக்கிய அரங்காக "சிற்பி ஓர் ஆய்வு" எனும் பொருளில் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம், ''சிற்பிக்கான சிறப்புரை'' எனும் பொருளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஆசிரியர் பொ. வல்லிபுரநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். அத்துடன் சிற்பியும் விசேட உரை வழங்கவுள்ளார். (ஓ)

## பணிப்பாளர் நியமனம்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர். ஏ. திலகரத்தினம் இம் மாதம் 15ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் செல்ல உள்ளதால், தற்பொழுது உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா துறைத் தலைவராக கடமையாற்றும் கே. கதிரமலை (பி.கொம்) பணிப்பாளராக இம்மாதம் 16ஆம் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்கும் பொருட்டு உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ)

# வீட்டுத்தோட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவன்

(சித்தன்கேணி)

உள்ளூர் உணவு உற்பத்தியை துரிதப்படுத்தும் நோக்கில் 2007-2010 தேசிய வேலைத் திட்டத்தின் மத்திய அரசினால் நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டியில் யா/ வட்டு நவோதயாக் கல்லூரியின் மாணவன் செல்வன் குகனேசன் சபிசான் கிராம மட்டத்தில் முதலிடத்தையும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். (ஓ-17)



## பீடங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 7ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பீடங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தை கலைப்பீடமும், இரண்டாம் இடத்தை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும், மூன்றாம் இடத்தை விஞ்ஞான பீடமும், நான்காம் இடத்தை மருத்துவ பீடமும், ஐந்தாம் இடத்தை விவசாய பீடமும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பி. நேசரூபன் 800மீற்றர் ஓட்டப் போட்டியிலும், முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த எம்.மொஷாந்தி 400 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் புதிய சாதனைகளை ஏற்படுத்தினர்.

ஆண்கள் பிரிவில் பி. நேசரூபன் சிறந்த தடவீரராகவும், என். றுசாந்தன் சிறந்த களவீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். பெண்கள் பிரிவில் எம். மொஷாந்தி சிறந்த தடவீராங்கனையாகவும், எஸ். சாந்தினி சிறந்த களவீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

எம். மொஷாந்தி இப் போட்டியில் சிறந்த வீரருக்கான சிறப்புப் பரிசிலையும் பெற்றுக் கொண்டார் என யாழ் பல்கலைக்கழக உடற் கல்வி அலகு பணிப்பாளர் ஜி. கணேசநாதன் அறிவித்தள்ளார். (ஓ)




## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இம்மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு புதிய பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளதாக பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## திறந்த பல்கலைக்கழக முன்பள்ளி சான்றிதழ்

இலங்கை திறந்த பல்கலைக்கழக முன்பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2008/2009ஆம் கல்வி ஆண்டுக்கான பதிவுகளை யாழ்.பிராந்திய நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 2.30மணிக்கு இடையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிராந்தியப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வ சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று சனிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் "ஆதாரம்-இலேன்" எனும் பொருளில் வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் அ.சிவநாதன் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும், நாளை மறுதினம் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-32)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் யாழ். கந்தர்மடம் இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேடத் திரவிய ஓமம் நடைபெற்று மகா அபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறும். (ஓ)

## சதய நட்சத்திர பாதபூஜை

ஸ்ரீ கல்கி பகவான் பகவதி அம்மா சதய நட்சத்திர பாதபூஜை எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக மையத்தில் செல்வி மேனகா ஜெயராசசேகரம் பொறுப்பேற்று நடாத்துகின்றார். (ஓ)





அண்மையில் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையின் பாடசாலை சேமிப்பு அலகின் மூலம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பொன் அரும்பு கணக்கு வைத்திருக்கும் மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்ட பரிசினை பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் வழங்குவதனையும், அருகில் வங்கி ஊழியர்களான த.சுதாகரன், கே.கே.விக்னேஸ்வரன் ஆகியோரை முதலாவது படத்திலும் இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## விநியோகிக்கப்படாத புதிய மோட்டார் சைக்கிள் புத்தகம் — சாரதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகம்

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட விநியோகிக்கப்படாத புதிய மோட்டார் சைக்கிள் புத்தகம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான ஆவணங்கள் பல உரிமையாளர்களிடம் விநியோகிக்கப்படாமல் யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய தபால் அலுவலகங்களினால் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக அவ் ஆவணங்களுக்குரிய உரிமையாளர்கள் பலர் உரிய முகவரியை விட்டு இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். சிலரது முகவரி உரியவரை அடையாளம் காண்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது. ஆகவே கீழ்க்குறிப்பிடப்படும் வாகன பதிவுப் புத்தகங்களுக்குரிய உரிமையாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையுடனும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்துக் குரியவர்கள் தங்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துடனும் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுக்கொள்கின்றார். கிடைக்கப் பெற்றுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன பதிவுச் சான்றிதழ்களுக்குரியவர்களின் பெயர் விபரம் வருமாறு,


**1. சாரதி அனுமதிப்பத்திர விபரம்**

அ.பரமேஸ்வரன்-அரியாலை, அ. விசுவலிங்கம்-யாழ்ப்பாணம், ம.மரியதாசன் -கொழும்புத்துறை, ஜீ.லக்ஸ்மன்-திருநெல்வேலி, சி.லம்போதரன்-சுண்டுக்குளி, ச.ஸ்ரனிஸ் லஸ்-யாழ்ப்பாணம், மா.ஜெயராசா-கொட்டடி, திருமதி மேகலா ஜெயவிந்தன்-யாழ்ப்பாணம், செல்வி ஆரணி தம்பிராஜா-கல்வியங்காடு கு.ரவிக்குமார்-யாழ்ப்பாணம், க.கேதீசன்-கொட்டடி.

**2.வாகன பதிவுச் சான்றிதழ்**

எம்.தர்மேந்திரா-உடுவில், எஸ். சிறிகாந்தன்-சாவகச்சேரி, என்.சுகந்தினி-பண்டத்தரிப்பு, எஸ்.திருச்செல்வம்-பருத்தித்துறை, எஸ்.தர்ஷன்நிக்லன்-சுண்டுக்குளி, எஸ். சுமித்திரா-யாழ்ப்பாணம், எஸ்.யோகேஸ்வரி -அரியாலை, டபிள்யூ.தியாகராஜா -யாழ்ப்பாணம், எஸ்.சிவலிங்கம்-நல்லூர், எம். அன்ரன் -யாழ்ப்பாணம், கே.சிறிஸ்கந்தகுமார்-நல்லூர் வடக்கு, பி.மோகனராசன் -யாழ்ப்பாணம், எஸ்.பொன்னம்பலம் -கொழும்புத்துறை, பி.கணபதிப்பிள்ளை-கச்சாய், எஸ்.வசந்தகுமார் - அரியாலை, எம்.றெர்சான்-யாழ்ப்பாணம், கே.பிரசன்னா-கோண்டாவில் கிழக்கு, வி.சதானந்தன்-கைதடி, ரி.சசிகரன்-புத்தூர், எம். ஞானச்சந்திரன்-கொழும்புத்துறை, எஸ்.சுரேந்தர்-அரியாலை, சி.இராசரத்தினம்-நல்லூர், கே.தர்மராசா-வல்வெட்டித்துறை, எஸ். தயாளினி-தாவடி, என்.சுப்பிரமணியம்-கொக்குவில், எல்.கிறிஸ்தோப்-சுழிபுரம், பி.பிறேம்தாசன்-உரும்பிராய், கே.இராசலிங்கம்-கோண்டாவில், எஸ். மலர்வண்ணன்-இணுவில், NPHS-9723 -குருநகர் (ஓ)

# நோத்முதல் கோபல்லவா வரை 97



### ஆள்பதி மக்கலம் காலத்துத் திருத்தம்

ஆனால் குடியேற்ற மந்திரியாராய குறூவ் பிரபு, ஆள்பதி அவர்கள் எழுதியவற்றை முற்றாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் இலங்கையருக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை வழங்கி இலங்கையரின் தெரியப்பட்ட பிரதிநிதி ஒருவரைச் சட்டசபையில் இருத்த வழிவகுத்தார். ஆள்பதி அவர்களின் நியமன உரிமையை அவர் நீக்காது ஆறு அங்கத்த வரை அவர் நியமிக்க இடம் கொடுத்தார். அன்றி உத்தியோக அங்கத்தவரின் பெரும்பான்மைப்பலத்தை நீக்காது அதனை ஒருவரால் மேலதிகமாக இருக்க அனுமதித்தார். முன்னர் ஐரோப்பியர் பிரதிநிதிகள் மூவராக இருந்தமை இப்போது இருவராகக் குறைக்கப்பட்டனர். அவ்விருவரும் நாட்டுப்புற ஐரோப்பியருக்கும் நகர்ப்புற ஐரோப்பியருக்குமாகத் தெரியப்பட்டனர். பறங்கியரும் படித்தவராகையால் தம் பிரதிநிதியைத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.ஆகவே இப் போது தேர்தல் மூலம் நால்வர் தெரியப் பட வாய்ப்பு ஏற்படலாயிற்று.

இவ்வேளையில் பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவர் வரிசையிலே இருந்த தாராண்மையாளர் இலங்கை பிற்போக்குவாதியாய மக்கலம் அவர்களால் ஆட்சி செய்யப்பட்ட தன்மையைப் பற்றிக் குடியேற்ற மந்திரியாரைக் கேள்விகள் கேட்டார்கள். திருவாளர் கோபற், சேர் ஹென்றி கொட் டன், சேர் யோன் யார்டயின், சேர். ஹேபேட் றோபேட்ஸ் ஆகியோர் குடியேற்ற

**மீன் பார்வை**

நாடுகள் நல்ல முறையில் ஆட்சிசெய்யப்படல் வேண்டு மென்று கூறினார்கள். சேர்.ஹென்றி கொட்டன் அவர்கள் , ''இலங்கைச் சட்ட சபை யில் ஒரே ஒரு தெரியப்பட்ட பிரதிநிதிதானும் இல்லாமல் ஆட்சி நடைபெறுவது பெரிய விந்தையாய் இருக்கிறது .

நாட்டு மக்களிடையே ஏற்பட்ட அதிருப்தியைக் கனம் குடியேற்ற மந்திரியா ரவர்கள் அறிவாரோ? இலங்கைச் சட்ட சபையில் கூடிய விரைவில் தெரியப்பட்ட பிரதிநிதிகளை இருத்துவதோடு, ஆள்பதி யின் நிர்வாக சபையிலும் இலங்கையர் பிரதிநிதிகள் இடம்பெறத் தக்கதாகத் திருத் தங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்'' என்று பேசினார்.

இங்ஙனம் லண்டனில் இலங்கையருக்காக அனுதாபந் தெரிவித்த இப்பெரியவர் இலங்கைவாழ் மக்களுக்குப் பத்திரிகைகளை நல்லமுறையில் நடத்தும் அச்சுலகு சுயாதீனமாக ஸ்தாபிக்கப்பட வேண்டு மென்று ஆலோசனையுங் கூறி அதற்கான உதவியும் செய்ய ஆயத்தமானார். அவருடைய ஆலோசனையின் வண்ணமே விஜயவர்த்தனா அவர்கள் பத்திரிகைகளை ஆரம்பித்தார் என்பர். அவர் முயற்சியாலேயே ஏரிக்கரைப் பத்திரிகைக் கூட்டம் வெளிவரலாயின.

லண்டனில் நிகழ்ந்த விபரத்தை அங்கிருந்து குடியேற்ற மந்திரியார் இலங்கையில் ஆள்பதியாயிருந்த மக்கலத்துக்கு எழுதினார்.ஆனால் மக்கலமும் கிளிபோட்டும் சேர்ந்து இலங்கைக்கு அந்த நேரத்தில் அரசியற்றிருத்தஞ் செய்ய இயலாது என மந்திரியாருக்கு எழுதினார்கள். அன்றி அரசியற்றிருத்தங் கோரி இலங்கையர் தமக்கு அனுப்பிய நினைவேடுகளையும் புறக்கணித்து விடுவாராயினர். கல்மனம் படைத்த ஆள்பதியவர்கள் அரசியலமைப்பில் ஒரே ஒரு சிறிய மாற்றம் -அதுவும் சட்டசபையில் படித்த இலங்கையரின் பிரதிநிதியாக ஒரு இலங்கையரை அனுமதிக்கத் தாம் இடமளிப்பதாகக் கூறினார். வேறெவ்விதமான மாற்றத்துக்கும் தாம் தகவுரை கூறமுடியாது எனச் சினத்தோடு கூறி நின்றார்.

ஆனால் குடியேற்ற மந்திரியார் அவர்கள் 24.11.1910 இல் கொடுக்கப்பட்ட வேத்தியல் ஆணையின் வண்ணம் ஒரு மாற்றஞ் செய்யப்படலாயிற்று. அதன் பிரகாரம் சட்ட சபையில் 11 உத்தியோக அங்கத்தவரும் 10 உத்தியோகப் பற்றற்றவரும் இடம்பெறுவர். உத்தியோகப் பற்றற்றவருள் நால்வர் தெரி

**க.சி.குலரத்தினம்**

யப்பெறுவர்.

அவர்கள் முறையே நகர்ப்புற ஐரோப்பியர், நாட்டுப்புற ஐரோப்பியர், படித்த இலங்கையர், பறங்கியர் ஆகிய சமூகத்தினரின் பிரதிநிதிகளாவர். ஏனைய ஆறு உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளும் ஆள்பதி அவர்களால் நியமிக்கப்பெறுவர். அவர்கள் கண்டிச் சிங்களவருக்கு ஒருவரும், முஸ்லிம்களுக்கு ஒருவரும், கரை நாட்டுச் சிங்களவருக்கு இருவரும், தமிழ ருக்கு இருவருமாவர்.

(தொடரும்)



துணைவி கிராம அபிவிருத்திச் செயலகக் கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும்,புதிய கட்டடத்தினை சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கோபி)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி சாந்தா யசோதரனின் பணிநயப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் அவர் கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம். (படம்:-கோபி)

# தொல்லியல் நோக்கில் 3

# கந்தரோடையும் கதிரமலையும்

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து இங்கு ஒரு மனிதப் பரிணாமம் நிகழவில்லை என்பது தெரிகிறது. இதனால் இலங்கைக்குரிய மக்கள் ஏதோ ஒரு காலப் பகுதியில் இன்னொரு நாட்டிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் என்பது தெரிகிறது. அவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? என்பன போன்ற கேள்விகள் இதில் முக்கியமாகத் திகழ்கின்றன.

இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றி கி.பி. 1893 இல் ஆராய்ந்த சரசின் முதல் பி. இ.பி. தெரண்ணியகலா, சிரான்தெரணிய கலா, கென்னடி வரை இலங்கையில் பழைய கற்கால,புதிய கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்ததற்குரிய கல்லாயுதங்கள் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் கி.மு. 125000 முதல் கீழை, மத்திய பழங் காலத்திற்கு உரிய கல்லாயுதங்கள் தென்னிலங்கையின் இரத்தினபுரியிலும், வட இலங்கையில் முருங்கன், மாங்குளம், இரணைமடு போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (Deraniyagala: 979: 45-66, 1990A) இருப்பினும் இவற்றை அறுதி யிட்டுக் கூறுவதில் தொல்லியல், மானிடவியலாளரிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

இதுவரை கிடைத்த உறுதியான சான்றுகளில் இருந்து நுண் கற்காலப் பண்பாட்டிற்குரிய (Mesolithic Culture) மக்கள் மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை வாழ்ந்துள்ளனர் என்பதை அறுதியிட்டுக் கூறமுடிகிறது. நுண்கற்காலம் என்பது பொதுவாக பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப் பட்ட காலத்தைக் குறிக்கும்.

இலங்கையில் புதிய கற்காலப் பண்பாட்டிற்குரியதென உறுதிப்படுத்தக் கூடிய உறுதியான சான்றகள் இதுவரை கண்டுபிடிக்கப்படாததினால் இக்காலம் பழைய கற்காலத் திற்கும் பெருங்கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பதாகக் கூறப்படுறது. சில இடங்களில் பழைய கற்காலச் சான் றுகள் கிடைக்காத நிலையில் அதன் வரலாறு நுண்கற்காலத்துடன் தொடங்கு கிறது.

வேறு சில இடங்களில் பழைய கற்காலமோ, நுண் கற்காலமோ கண்டறியப் படாத நிலையில் அதன் வரலாறு பெருங் கற் காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாகிறது. நுண்கற்காலக் கருவிகள் மிக நுண்ணியதாக இருப்பதால் இக் காலத்தை நுண் கற் காலம், குறுணிக்கற்காலம் (Micro lithic) எனவும் அழைக்கலாம்.

இக் கருவிகள் நுண்கற் காலத்தில் அதிகம் காணப்பட்டாலும் அவை மனிதன் உணவு உற்பத்தியை (Food producing stage) மேற்கொண்ட புதிய கற்கால, செம்புக்கால, பெருங்கற்காலப் பண்பாடுகளிலும் ஓரளவு பயன்பாட்டில் இருந்துள்ளன. (செல்வகுமார் 1997:140) இதனால், இக்கருவிகள் காணப்படும் இடங்கள் அனைத்தையும் நுண்கற்காலத்தைச் சார்ந்தவை எனக் கூறமுடியாது.

நுண் கற்காலத்திற்குரிய சான்றுகள் தென்னாசியாவில் பரந்துபட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்காலக் கருவிகள் பழைய கற்காலக் கருவிகளை விடக் கூடிய தொழில்நுட்பம் உடையன. இவை குவாட்ஸ் (Quartz), சேர்ட்(Chert), ஜாஜ்பர்(Jaspar), அகேட்(Agate), சல்ஸ்டனி(Chalcedony), ஓபல்(Opal), முதலான கற்களைக் கொண்டு ஆக்கப் பட்டவை. (பாலச்சந்திரன் 1994:74) இவற்றின் வடிவமைப்பைப் பொறுத்து அலகுக் கத்தி(Blades), முக்கோண வடிவுடைய கருவிகள் (Triangles), நிறைவடிவுடைய கருவிகள்(Crescents) முனைகள் (Points) வெட்டிகள் (Choppers)எனப் பல வகைப்படும். இவை மிகச் சிறிய வடிவங்களைப் பெற்று இருப்பதால் ஒவ்வொன்றையும் தனித்தனியே பயன்படுத்தாமல் ஒன்றுக்கு மேற்பட்ட கருவிகளை இணைத்து கூட்டுக்கருவிகளாகப் பயன்படுத்தினர். இவை மரப்பிடிகளிலோ எலும்புப் பிடிகளிலோ பசைகொண்டு ஒட்டி நீண்ட கத்தியாகவும் அறுக்கப் பயன்படும் அரிவாள்களாகவும் பயன்படுத்தினர். இலங்கையில் பழைய கற்காலக் கல்லாயுதங்களினை விட நுண்கற்காலக் கல்லாயுதங்கள் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களைக் கொண்டு நீர் நிலை சார்ந்த குகைகளிலும்,சம வெளிகளிலும் இக்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

வட இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த மற்றைய இடங்களில் இக்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை மாதோட்டம், மாங்குளம், பூநகரி போன்ற இடங்களில் கிடைத்த குவாட்ஸ் கல்லாயதங்கள் உறுதிப்படுத்துகின்றன. (Ragu pathy 1997, புஸ்பரட்ணம்2000) மாதோட்டத்தில் எண்ணிக்கையில் அதிக மான கல்லாயுதங்கள் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் கி.மு. 1840 முதல் 1570 வரை என கணிக்கபட்டுள்ளது. கட்டுரை ஆசிரியர் பூநகரி பிராந்தியத்தில் மேற்கொண்ட ஆய்வின்போது மண்ணித்தலை வெட்டுக் காடு, கல்முனை ஆகிய இடங்களில் இருந்து 1.3 cm நீளமுள்ள குவாட்ஸ் கல்லாயுதங்கள் சிலவும் கல்லாயுதங் களை ஆக்கும்போது ஏற்பட்ட செதில்கள் (Flakes) பலவும் பெறப்பட்டன.

வெட்டுக்காட்டில் இக்காலத்திற்குரிய இன்னொரு வகையான சேர்ட்(Chert) கற்கள் சில கிடைத்துள்ளன.

இவற்றுள் ஒன்று கால்லாயுதத்திற்குரிய செயற்கை வடிவத்தைப் பெற்று அரைகுறையாகக் காணப்படுகிறது.

இக்கல்லாயுதங்களுடன் மீன் பிடிப்பதற்குரிய ஊசிகள் (Fish -Hooks) சில கிடைத்துள்ளன.

பொதுவாக இக் கல்லாயு தங்கள் கண்டெடுக்கப்பட்ட பூநகரிப் பிராந் தியம் மணற்பாங்கான பகுதியாக இருப்பதனால் காற்றடிக்கும் காலங்களில் முற்பட்ட கலாசார சின்னங்கள் கலந்த நிலையில் பிற்காலச் சான்றுகளுடன் சேர்ந்து காணப் படுகின்றன. இதனால் இக் கல்லாயுதங்களை மட்டும் வைத்து நுண்கற்காலப் பண்பாட்டிற்கு உரிய சான்றுகளாகக் கூறமுடியாது இருக்கின்றது.

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**


தென்னிலங்கையில் பெலன்-பண்டி-பலசவை விட நிக்கல் பெலிகல பதபொம்பலேன, றாவெனவல, பெலிலேன, கித்துள்கல, குருவித்த போன்ற இடங்களில் உள்ள குகைகளில் நுண்கற்கால கல்லாயுதங்களுடன் மனித மிருக எலும்புகளும் பிற சான்றுகளும் கிடைத்துள்ளன.

(தொடரும்)

# பாகிஸ்தானின் அனுமதி இல்லாமலேயே அமெரிக்கப்படை அல் - குவைதா மீது தாக்குதல் நடத்த புஷ் உத்தரவு

(நியூயோர்க்)

பாகிஸ்தான் அனுமதி இல்லாமலேயே அந்நாட்டின் எல்லைக்குள் நுழைந்து அல்-



குவைதா பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க படையினருக்கு அதிபர் புஷ்ரகசியமாக அனுமதி வழங்கியுள்ளார். இத் தாக்குதல்களை பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதி கியானி எதிர்த்திருக்கிறார்.

தலிபான் மற்றும் அல்-குவைதா பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுடன் இணைந்து செயல்பட ஏழு ஆண்டுகளாக அமெரிக்கா முயற்சித்து வந்தது. இதில் எந்த முன்னேற்றமும் இல்லாததால் பாகிஸ்தானின் அனுமதி பெறாமலேயே அந் நாட்டின் எல்லைக்குள் நுழைந்து பயங்கரவாதிகள் மீள் தாக்குதல் நடத்த அமெரிக்க படையினருக்கு அதிபர் புஷ் இரகசிய அனுமதி அளித்துள்ளார்.

அல்-குவைதா மற்றும் தலிபான் பய்ங்கரவாதிகளின் பாதுகாப்பான மறைவிடமாக வடமேற்கு எல்லைப் பகுதி மாகாணத்தில் பழங்குடியினர் பகுதி இருக்கிறது. அவர்கள் மீது எந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் பாகிஸ்தானால் முடியவில்லை. பாகிஸ்தான் இராணுவம் மற்றும் உளவு அமைப்பு மீது அமெரிக்கா நம்பிக்கை முழுவதுமாக இழந்துவிட்டது.

பாகிஸ்தான் அளிக்கும் தகவல் அடிப்படையில் தாக்குதல் நடத்தினால், அது பயனளிக்காது என்ற முடிவுக்கு அமெரிக்கா வந்து விட்டது. சமீபத்தில் ஆப்கானிஸ்தான் எல்லை அருகே பாகிஸ்தான் கிராமத்தில் அமெரிக்கப் படையினர் திடீர் தாக்குதல் நடத்தி திரும்பினர். இது போன்ற தாக்குதல்களை தொடர்வதற்கு புஷ் அனுமதி அளித்துள்ளார்.

பாக் இராணுவத் தளபதி கியானி எதிர்ப்பு

அமெரிக்க இராணுவம் நடத்தும் இத் திடீர் தாக்குதல் பாகிஸ்தான்எல்லைக்குள்நடப்பதை அனைத்து முயற்சிகளுடன் எதிர்ப்போம் என்று பாக் இராணுவ தலைமை தளபதி அஷ் பாக் பர்வேஸ்கியானி தெரிவித்தார். அவர் மேலும், பயங்கரவாதிகளை எதிர்ப்பது என்றால் பாகிஸ்தான் இராணுவத் துணையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிடப்பட்டபோது, இம்மாதிரி வெளிசக்திகள் தங்கள் இஷ்டத்திற்கு இராணுவ நடவடிக்கை எடுப்பதை எப்படி அனுமதிப்பது என்று கேட்டார். கியானி தெரிவித்த கருத்தை பாக்.பிரதமர் கிலானியும் ஆதரித்திருக்கிறார். (அ-6)

# அரைகுறை ஆடையுடன் நடனமாடிய அவுஸ்திரேலிய அமைச்சரின் பதவி பறிப்பு

(சிட்னி)

இரவு விருந்தில் போதையில் அரைகுறை ஆடையுடன் நடனமாடிய அவுஸ்திரேலிய அமைச்சரின் பதவி பறிக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் நியூ சௌத் வேல்ஸ் மாநிலத்தில் தொழிலாளர் கட்சி ஆட்சியில் உள்ளது.

அம்மாநில காவல்துறை அமைச்சராக பணியாற்றிய மாட்பிரெவுன், அண்மையில் நடந்த இரவு விருந்து ஒன்றில் போதையில் உள்ளாடையுடன் நடனமாடியுள்ளார்.

இந்த செய்தி முன்னணி நாளிதழ்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து அவரை உடனடியாக பதவி விலகுமாறு மாநில முதல்வர் நதான் ரீஸ் உத்தரவிட்டார்.

இதை ஏற்றுக்கொண்ட மாட் பிரெவுன் வியாழக்கிழமை தமது பதவியை ராஜிநாமா செய்தார். (அ-6)

# பன்றியின் மீது பூசப்பட்ட உதட்டுச்சாயம் தொடர்பான குற்றச்சாட்டுக்கு ஒபாமா மறுப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் மக்கெயினதும் அவரது உபஜனாதிபதி வேட்பாளருமான சாரா பாலினதும் மாற்றம் தொடர்பான வாக்குறுதிகள் பன்றியின் மீது பூசப்பட்ட உதட்டுச் சாயம் போன்றது என வர்ணித்ததன் மூலம் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா பெரும் சர்ச்சைக்கு ஆளாகியுள்ளார்.

மேற்படி விமர்சனமானது பாலியல் ரீதியானது என குடியரசு கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் ஒபாமா அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். ஜோன் மக்கெயின் உண்மையான பிரச்சினைகளை விடுத்து போலியான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார். (அ-6)

# இந்தோனேசியாவிலும் ஜப்பானிலும் இடம்பெற்ற பூகம்பத்திற்கு அணுப்பிளவு சோதனை காரணமா?

கடந்த இரு நாட்களில் இடம்பெற்ற நில அதிர்வுசம்பவங்களுக்குள் அணு சோதனைக்கும் தொடர்பு இருப்பதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்தசோதனையின் போது அணுக்களை மோதச் செய்ததன் விளைவாகவே இந்த நில அதிர்வுகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அணுக்களை மோதச் செய்யும் போது சுமார் ஆயிரம் பில்லியன் டிகிறி செல்சியஸ் வெப்பம் உருவாகும். இதனால் உலகிற்கு பாரிய அனர்த்தங்கள் ஏற்படலாம் என ஏற்கனவேபல்வேறு தரப்புக்களிலிருந்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் இந்த வெப்பநிலையைக் கட்டுப்படுத்தக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆய்வுக்கூட விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே அணுச்சோதனை காரணமாகத்தான் ஜப்பான், இந்தோனேசியா, ஈரான் மற்றும் நாடுகளில் நில அதிர்வுகள் ஏற்பட்டதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட அணுக்களைமோதவிடும்சோதனை முதற்கட்ட வெற்றியை பெற்றிருப்பதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இந்தோனேஷியாவிலும் ஜப்பானிலும் பூகம்பம்

## காயம், பொருட்சேதம் ஏற்படவில்லை

இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் வியாழக்கிழமை காலை பூகம்பம் ஏற்பட்டது. இரண்டு நாடுகளிலுமே அதன் வீரியம் ரிக்டர் அளவில் 7ஆக இருந்த்து. இந்த பூகம்பங்களில் யாருக்கு காயம் ,பொருட்சேதமும் ஏற்படவில்லை ஜப்பானில் கடல் ஓரத்தில் 4 அங்குல உயரத்திற்கு சுனாமி பேரலை ஏற்பட்டது. இதேவேளை புதன் கிழமை ஈரானில் பூகம்பம் ஏற்பட்டதில் 4 பேர்பலியானர்கள். இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பூகம்பம் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் ஏற்பட்டது. இந்தோனேசியாவில் காலை 9 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. கிழக்கே உள்ள மொலுக்காஸ் தீவிலும் பூகம்பம் ஏற்பட்டது. பூகம்பத்தின் வீரியம் ரிக்டர்அளவில் 7.6 ஆக இருந்தது. வடக்கு சுலோவேசி மாநிலத்தின் தலை நகரான மனடோவிற்கு கிழக்கே பூமிக்கு அடியில் 93 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த பூகம்பத்தின் மையம் இருந்தது. பூகம்பத்தின் வீரியம் அதிகமாகஇருந்ததால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது.

சிறிதுநேரத்திற்கு பிறகு இந்தஎச்சரிக்கை விளக்கிக்கொள்ளப்பட்டது. பூகம்பத்தை மெலிதாக உணரமுடிந்தது. இதனால் மக்கள் பெரிய அளவில் பீதி அடையவில்லை. என்று உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.

ஜன்னல்கள்,கண்ணாடிகள் மட்டும் ஆடின என்றும் எதுவும் உடையவில்லை என்றும் அவர்கள் கூறினார்கள்.

**ஜப்பானின் சுனாமி பேரலை**

இந்தோனோசியாவில் பூகம்பம் தாக்கிய 20 நிமிடங்களுக்குப்பிறகு ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டது. ஹெக்கைடோ தீவில் அதன் வீரியம் ரிக்டர் அளவில் 7ஆகஇருந்தது. ஜப்பான் கடலோரத்தில் சுனாமி பேரலை ஏற்பட்டது. அலைகள் 4 அங்குல உயரத்திற்கு எழுந்தன. ஹிரோ நகரத்தில் நகராட்சி அலுவலகத்தில் பூகம்பம்காரணமாக சுவரில் 2 அங்குலத்திற்கு பிளவு ஏற்பட்டது.

**டொகாச்சி கடலோரத்தில்பூமிக்கு கீழே 20 கிலோமீற்றர் ஆழத்தில் பூகம்பத்தின் மையம் இருந்தது.**


ஹெக்கைடோவில் உள்ள ஷின் சிட் டோஸ் விமான நிலையத்தில் ஓடு பாதை பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டது. பூகம்பத்திற்கு பிறகு டோமாரி அணுமின் நிலையம் எந்தப் பாதிப்பும் இல்லாமல் வழக்கம் போல செயற்பட்டது. அதுபோல நிப்போன் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும் வழக்கம் போல இயங்கியது.

**ஈரான், சிலி**

ஈரான் நாட்டில்ஏற்பட்ட பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்தது. அங்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சி 6.1ஆக பதிவானது குறிப்பிடத்தக்கது. தென்அமெரிக்க கண்டத்தில் உள்ள சிலி நாட்டிலும் நில நடுக்கம் ஏற்பட்டது. அது 5.8ஆக பதிவானது. உயிர் சேதம் பற்றித் தகவல் இல்லை. (அ-6)

# இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கா பயணம் அணுசக்தி இறுதி ஒப்பந்தத்தில் கையெப்பம் இடுவார்

பிரதமர் மன்மோகன்சிங் 5 நாள் சுற்றுப் பயணமாக அமெரிக்கா செல்கிறார். அங்கு 25ஆம் திகதி அதிபர் புஷ்ஷை சந்தித்து பேசு



கிறார். இந்த சந்திப்பு நடப் பதற்குள்அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்க பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டால் அதில் 2 தலைவர்களும் கையெழுத்து இடுவார்கள்.

இந்தியா அணுசக்தி எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு 34ஆண்டுகளாக இருந்து வந்த தடையை, அணுசக்தி எரிபொருள் விற்பனை நாடுகள் அமைப்பு (என். எஸ்.ஜி) கடந்த வாரம் நீக்கியது. இதையடுத்து அணு சக்தி ஒப்பந்தம், அமெரிக்க பாராளுமன்றத்தின் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**புஷ் அழைப்பு**

அமெரிக்காவுக்கு வரும் மன்மோகன் சிங்கை சந்திக்க அமெரிக்க அதிபர் புஷ் விருப்பம் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் 25ஆம் திகதி தன்னை சந்திக்கும்படி அவர் அழைப்பு விடுத்துள்ளார். அதை ஏற்று புஷ்சை 25ஆம் திகதி மன்மோகன்சிங் சந்திக்கிறார். 25ஆம் திகதிக்குள் அணுசக்தி ஒப்பந்தம் அமெரிக்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டால், இருவரும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.

ஒருவேளை, அதற்குள் ஒப்பந்தம் அமெரிக்க பாராளுமன்ற ஒப்புதலை பெறாவிட்டாலும், வேறு இருதரப்பு விவகாரங்கள் குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். இராணுவ ஒத்துழைப்பு பற்றியும் வேளாண்மை, கல்வி, வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்து வது குறித்தும் இருவரும் விவாதிக்கிறார்கள்.

மன்மோகன்சிங்கை சந்திப்பதில் புஷ் ஆர்வமுடன் இருப்பதாக வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் டானா பெரினோ தெரிவித்தார். அணுசக்தி ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு புஷ்சும், மன்மோகன்சிங்கும் முன்னுரிமை அளிப்பதாகவும் அவர் கூறினார்.

**பாராளுமன்றத்தில் அணுசக்தி ஒப்பந்தம்**

இதற்கிடையே, அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது தொடர்பான, 123 ஒப் பந்தத்தை அதிபர் புஷ் அமெரிக்க பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ளார். அதனுடன் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் புஷ் கூறியிருப்பதாவது,

ஆக்கப்பூர்வ பணிகளுக்காக அணுசக்தியை பயன்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது. இந்த ஒப்பந்தம் 40 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும். ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள விரும்பினால், ஓராண்டு கால அறிவித்தல் கொடுத்து விட்டு, ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளலாம். அப்படி அறிவித்தல் கொடுத்த நாடு, ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்பேத, இருதரப்பு ஒத்துழைப்பை நிறுத்திக்கொள்ளலாம்.

இந்த ஒப்பந்தத்தை இரு நாடுகளும் முறித்துக்கொள்ள விரும்பாத பட்சத்தில் 40 ஆண்டுகாலத்துக்கு பின்னரும், மேலும் 10 ஆண்டு காலத்துக்கு இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும். இவ்வாறு புஷ் கூறியுள்ளார்.

**எதிர்க்கட்சி சம்மதம்**

அமெரிக்க பாராளுமன்ற கூட்டத்தொடர், செப்டெம்பர் 26ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. பொதுவாக. ஒரு ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டு 30 நாட்களுக்கு பிறகுதான், அதன் மீது ஓட்டெடுப்பு நடத்தப்படும். எனவே இந்த கூட்டத்தொடரில் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வாய்ப்பு இல்லை.

இருப்பினும் இந்த விதிமுறையை திருத்தி நடப்பு கூட்டத்தொடரிலேயே ஒப்பந்தத்தை நிறைவேற்ற புஷ் அரசு விரும்புகிறது. இதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் ஒத்து ழைப்பை கோரி, அமெரிக்க வெளியுறவு மந்திரி கொண்டலீசா ரைஸ்,செனட் சபை ஜன நாயக கட்சி தலைவர் ஹாரி ரீடை சந்தித்து பேசினார். இதையடுத்து அணுசக்தி ஒப்பந் தத்தை இந்த ஆண்டிலேயே நிறைவேற்றபாடுபடப் போவதாக ஹாரி ரீட் உறுதி அளித்துள்ளார். (அ-6)

# சீன மண்சரிவில் பலியானவர்கள் தொகை 128பேராக உயர்வு

வட சீனாவில் ஷாங்ஸி மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மண்சரி வில் இறந்தவர்கள் தொகை 128 ஆக உயர்ந்துள்ளது.

சுரங்கம் அகழ்தலுக்கு பிரசித்தி பெற்ற ஸியாங்பென் கிராமத்தில் ஏற்பட்ட இந்த மண்சரிவில், அநேக வீடுகளுடன் மூன்று மாடி அரச அலுவலகமொன்றும் சந்தையொன்றும் புதையுண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தத்தில் 35பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதுடன் பெருந் தொகையானோர் தொடர்ந்து புதையுண்ட நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. (அ-6)

# சேதன விவசாயத்தில் வினைத்திறன் மிக்க நுண்ணங்கிகளின் பயன்பாடு

வினைத்திறன் மிக்க நுண்ணங்கிகள் (Effective Micro organisms) எனப்படுவது மண்ணிற்கும், தாவரத்திற்கும் நன்மையளிக்கும் நுண்ணங்கிகளைக் கொண்ட கலவையாகும்.

இவ்வகையான நன்மையளிக்கும் நுண்ணங்கிகளின் கலவை (Effective Micro organisms) கூட்டெரு தயாரிப்பதிலும், விளை நிலங்களில் பயன்படுத்துவதன் மூலமும், மண்ணில் காணப்படும் தாவரங்களில் நோய் விளைவிக்கும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் சேதனக் கழிவுகளின் உக்கும் வேகத்தினையும் அதிகரிக்கின்றது.

வினைத்திறன்மிக்க நுண்ணங்கிகளின் கலவையானது, ஜப்பானிய பேராசிரியர் ''டேரு கிக்கா'' வினால் உருவாக்கப்பட்டது. இயற்கையாக சூழலில் காணப்படும் நன்மையளிக்கும் நுண்ணங்கிகளை தனித்தனியாகப் பிரித்து எடுத்து அதனை விசேட வளர்ப்பு ஊடகங்களில் வளர்த்துப் பின்னர் அவற்றினை ஒன்றாகக் கலந்து ஒரு கலவையாக உருவாக்கியிருக்கிறார்.

வினைத்திறன் மிக்க நுண்ணங்கித் தொழில்நுட்பமானது, (Effective Micro Organism Technology) இயற்கையான சூழலில் விவசாயத்தின் பேண்தகு தன்மையையும் இயற்கைத் தன்மையையும் பாதுகாக்கும் வகையில் இவ்வகைச் சிறப்பு நுண்ணங்கிகளின் பயன்பாட்டை உச்சளவில் வெளிப்படுத்துவதாய் உள்ளது.


இயற்கைச் சூழலில் மனித செயற்பாடுகளினால் மாற்றங்களைத் தோற்றுவிக்காத வகையில் அதன் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதீத இரசாயனப் பாவனை காரணமாக யாழ்.குடாநாட்டில் மண்ணின் வளம் குன்றி, இறந்து விட்ட நிலையை அடைந்துவிட்டது. (Dead Soil) அதீத களை நாசினி, வளமாக்கி மற்றும் பீடை கொல்லிப் பாவனையினால் மண்ணில் உள்ள நன்மைதரும் நுண்ணங்கிகளின் அளவு அரிதாகிவிட்டது. அத்துடன் யாழ்.குடாநாட்டில் வேகமாக அதிகரித்து வரும் புற்றுநோய் தாக்கத்திற்கு கட்டுப்பாடற்ற இரசாயனப் பாவனையும் ஒரு காரணமாக கருதப்படுகிறது. எனவே யாழ். குடாநாட்டில் சேதன விவசாயத்தின் தேவை அத்தியாவசியமாக உள்ளது.

சேதன உரமானது நன்மையளிக்கும் நுண்ணங்கிகளின் வாழிடமாகவும், உணவாகவும் உள்ளது. பசுமைப்புரட்சிக்குப் (Green Revolution) பின்னர் அசேதன இரசாயனப் பாவனை வேகமாக அதிகரித்தது. இதனால் விவசாயிகள் சேதன உரத்தின் பயன்பாட்டினையும் அதன் பெறுமதியினையும் மறந்தனர். சேதன உரம் அற்ற விளைநிலத்தில் நன்மை பயக்கும் நுண்ணங்கிகளின் அளவு, அவற்றின் வாழிடம் மற்றும் உணவு போன்றவை அதிகரிக்கப் பட்டதினால் குறைவடைந்தது. அத்துடன் தீமை பயக்கும் நுண்ணங்கிகளின் (Soil Pathoqenic Organism) அளவும் அதிகரித்தது. இதனால் நோய்த் தாக்கமும், பீடைத் தாக்கமும் என்றுமில்லாதவாறு அதிகரித்தது.

வினைத்திறன் மிக்க நுண்ணங்கிகளின் கலவையை நாம் மண்ணிற்கு இடுவதன் மூலம் எமது மண்ணை உயிர்ப்பிப்பதுடன் சேதன விவசாயத்தினையும் உயிர்ப்பிக்க முடியும்.

வினைத்திறன் மிக்க நுண்ணங்கிகள் கலவையானது பின்வரும் நுண்ணங்கிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.



- ஒளித்தொகுப்பு பக்டீரியாக்கள் (Photo Synthetic bactoria)
- இலக்றிக் அமில பக்டீரியாக்கள் (Lactric acid bactoria)
- மதுவம் (yeast)
- ஏனைய பங்கசுக்கள் (Ray Fungi)

ஒளித்தொகுப்பு பக்டீரியாக்கள் வளிமண்டல நைதரசனை மண்ணில் பதிப்பதுடன் மண்ணில் உள்ள பொசுபரசு மூலகத்தின் கரைதிறனை அதிகரித்து அதனை தாவரங்களுக்கு இலகுவில் கிடைக்கக் கூடிய வடிவிற்கு மாற்றுகின்றது.

இலக்றிக் அமில பக்டீரியாக்கள் இலக்றிக் அமிலத்தினைச் சுரப்பதன்மூலம் மண்ணில் வளரும் தீமையளிக்கும் நுண்ணங்கிகளின் வளர்ச்சியினைத் தடுப்பது டன் செலுலோசினையும் உக்கச் செய் கின்றது.

தாவர வளர்ச்சியினைத் தூண்டும் பதார்த்தங்களும், நுண்ணங்கிகளின் வளர்ச்சியினைத் தடுக்கும் பதார்த்தங்க ளும் மதுவக் கலங்களினால் சுரக்கப்படும்.

கூட்டெரு தயாரிப்பின் போது ஏற்படும் துர்மணத்தினை பங்கசுக்கள் (Ray Fungus) கட்டுப்படுத்துகின்றது.

### வினைத்திறன் மிக்க நுண்ணங்கிப் பாவனையினால் கிடைக்கும் நன்மைகளாவன

- ❖ தீமை விளைவிக்குழ் / நோயுண்டாக்கும் நுண்ணங்கிகளைக் கட்டுப்படுத்துகின் றது.
- ❖ நன்மை பயக்கும் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டினை அதிகரிக்கின்றது.
- ❖ சேதனப் பொருட்களின் பிரிகையடைதலைத் தூண்டுகிறது.
- ❖ கனியுப்புக்கள் மற்றும் தாவரச் சத்துக் களின் கரைதிறனையும்(Solubility) அவை தாவரங்களுக்கு கிடைக்கும் வடிவத்தினையும் (Avai lability) அதிகரிக்கின்றது.
- ❖ நைதரசன் பதிக்கும் பக்டீரியாக்களின் · செயற்பாட்டினைத் தூண்டி மண்ணில் உள்ள நைதரச்னை அதிகரிக்கின்றது.
- ❖ சேதன கழிவுகள் உக்குகின்ற கால அளவினைக் குறைக்கின்றது.
- ❖ சேதனக் கழிவுகளின் துர்மணத்தினை நீக்குகின்றது.
- ❖ சூழலிற்கு தீங்கு விளைவிக்காதது.
- ❖ தாவரத்திற்கு ஏற்படும் நோய், பூச்சித் தாக்கத்தினைக் குறைக்கின்றது.
- ❖ வளமாக்கி, பூச்சி கொல்லிகளுக்கான செலவினைக் குறைக்கின்றது.

### வினைத்திறன் மிக்க நுண்ணங்கிக் கரைசலைத் தயாரித்தல்

தேவையான பொருட்கள்

100 மில்லிலீற்றர் Effective Micro organisms முதன்மைத்திரவம்

100 மில்லிலீற்றர் சீனிக்கரைசல் (Brown Sugar)

10 லீற்றர் குளோரின் இடப்படாத நீர்

இவை மூன்றினையும் ஒன்றாகக் கலந்து 2-18 மணிநேரம் நேரடிச் சூரிய ஒளி படாத இடத்தில் வைக்க வேண்டும்.18 மணி நேரத் தின் பின்னர் இதனைச் சேதனக் கழிவுகளின் மேல் பூவாளியின் உதவியுடன் தெளிக்க வேண்டும்.

### வினைத்திறன் மிக்க நுண்ணங்கிகளைப் பயன்படுத்திக் கூட்டெரு தயாரித்தல்

100 கிலோ சேதனக் கழிவுகள்

10 கிலோ உலர்ந்த மாட்டுச் சாணம்

10 EM லீற்றர் கரைசல் (மேலே தயார் செய்யப்பட்டது)

குழிமுறை (Pit Method) கூட்டெருத் தயாரிப்பே மிகவும் பொருத்தமானது. ஏனெனில் குழியினுள் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பானது சில தீமை விளைவிக்கும் நுண்ணங்கிகளை அழித்துவிடும்.

6X4 அடி நீள அகலமுள்ள குழியினை வெட்டி அதனுள் 10 அங்குல தடிப்பிற்கு சேதனக் கழிவுகளையும், உலர்ந்த மாட்டுச் சாணத்தினையும் இடவேண்டும். பின்னர் அதன் மேல்EM கரைசலை பூவாளியினால் தெளிக்கவேண்டும். இவ்வாறு குழி முற்றாக நிரம்பும் வரை செய்தல் வேண்டும்.

யோ. நிருஷாந்தன்
விவசாய உயிரியல் சிறப்பு மாணவன்
தகவல் தொடர்பு மையம்
விவசாயபீடம்.

குழி நிரம்பிய பின்னர் அதனைக் கறுப்பு நிற பொலித்தீனால் மூடி விடுதல் வேண்டும். ஏனெனில் பொலித்தீன்னானது மழை மற்றும் நேரடிச் சூரிய ஒளித் தாக்கங்களில் இருந்து கூட்டெருவைப் பாதுகாக்கின்றது.

குழியின் வெப்பநிலை 35°C-45°C அடையும் போது கூட்டெருவினை நன்றாகக் கலக்கவேண்டும். இவ்வாறு தினமும் செய்ய வேண்டும். 6-10 நாட்களின் பின்னர் கறுப்பு நிற மான 100kg கூட்டெருவினைப் பெற முடியும்.

**தேவையான கூட்டெருவின் அளவு**

1ஏக்கர் நெல் வயலிற்கு 1.5 தொன் கூட்டெருவும். வேறு பயிர்களாயின் 200-300 கிராம்/ பயிர் என்ற அளவில் இட வேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானக் கலாசாரத்தை மேம்படுத்தும் புத்தாக்கக் கண்காட்சி

*(நேற்றைய தொடர்ச்சி)*

2003ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் புத்தாகக்கண்காட்சியொன்றை யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தினர் அக் கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த யாழ். மத்திய கல்லூரி மாணவன் என் .பிரசாத்தின் புத்தாக்கம் இங்கும் தேசிய மட்டத்திலும் பதகங்களைப் பெற்றதோடு சர்வதேச மட்டத்திலும் பரிசுகளை வென்று தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்த்தது. அதன் பின்னர் இந்த வருடமே இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்தில் அவ்வாறானதொரு கண்காட்சியை நடத்துவதற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து ஆயத்தங்களை மேற்கொள்ளுகிறது.

**இக் கண்காட்சி இம் மாதம் 16ஆம் 17ஆம் திகதியாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியை 16 ஆம் திகதி அன்று காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசங்க அதிபர் உயர்திரு கே. கணேஷ் வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.**

**. போட்டியில் வெற்றியடைந்த புத்தாக்குநர்களிற்கான விருதுகளை 17 ஆம் திகதி அன்று மாலை 2 மணியளவில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர்என். சண்முகலிங்கன் வழங்குவார். இக் கண்காட்சியை மாணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிடுவதற்காக ஒவ்வொரு வலயத்தைச் சேர்ந்தவர்களிற்கு வெவ்வேறு நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.**

### புத்தாக்கங்களின் அவசியம்

மாணவர்கள் ஆசிரியர்கள் மட்டுமின்றி எமது நாட்டின் ஒவ்வொருவரும் புத்தாகங்களை உருவாக்கி நாட்டின் அபிவிருத்திக்கு ஏதோவொரு விதத்தில் பங்களிப்புச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு சரியான முறையில் சிந்தித்து புதிய தர மான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பணத்தைப் பொறுத்தவரை புத்தாக்கக் கலாசாரம் இங்குள்ள மக்களின் இரத்தத்துடன் இரண்டறக் கலந்துள்ள ஒரு விடயமாகும். கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக அவர்கள் எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏராளமான கண்டுபிடிப்புகளை உருவாக்கி யிருந்தார்கள்.

ஆயினும் அவை சரியான முறையில் நெறிப்படுத்தப்பட்டு உண்மையான தொரு புத்தாக்கம் என்ற நிலையை அடைய முன்னரே கைவிடப்பட்டுவிட்டன என்பதுதான் வேதனையைத் தருகிறது.

ஆயினும் கடந்த காலத்தையிட்டுக் கவலைப்படுவதை விட இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவினர் முன்னெடுக்கும் ஆக்க முயற்சியை எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பமாக நாம் முன்னெடுத்து எமது திறமையை வளர்த்தெடுக்க வேண்டும்.

எனவே காலமெல்லாம் அந்நிய பழக்க வழக்கங்களைத் தழுவிய செயற்பாடுகளில் தங்கியிருப்பதைக் கைவிட்டு நாம் சுயமாக சிந்தித்துச் செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது. சோம்பேறித் தனத்திலிருந்து விடுபட்டு ஊக்கத்துடன்விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் மீது அக்கறை செலுத்த வேண்டும்.

ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் பதிவு செய்து கொள்வதற்காக வருட மொன்றில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை முன்வைக்கின்ற போது நம்மால் 30 கண்டு பிடிப்புக்களையேனும் முன்வைக்க முடியாதா? பாடசாலை மாணவர்களிடையேயும் ஏனையோரிடையேயும் ஆக்கத் திறன்களை ஏற்படுத்தி நிலை பெறச் செய்தல் என்பது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் சமூகத்தினதும் ஊக்குவிப்பு மற்றும் சந்தர்ப்பமளித்தல் ஆகிய செயற்பாடுகளிலேயே தான் தங்கியுள்ளது.

எனவே ஆக்கத் திறன்களை வளர்த்து நிலைபெறச் செய்வதற்காக நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு வழியில் பங்களிப்பை வழங்க வேண்டும்.


எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள புத்தாக் கக் கண்காட்சிப் போட்டியில் மாணவர்கள் பல அரிய கண்டு பிடிப்புகளை மேற்கொண்டு பரிசுகளைப் பெறுவதோடு நின்று விடாமல் அவர்கள் தமதுகண்டுபிடிப்புக்களை உற்பத் திப் பொருட்களாக சந்தைப்படுத்தவும் வேண்டும் அவ்வாறு தொடர்ந்து செய்யும் போதுதான் நாமும் ஜப்பான் போன்றதொரு அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் ஆகமுடியும்.

கலாநிதி நா.சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர் ,
யாழ்.பல்கலைக்கழகம்.

மேலும் இக் கண்காட்சிப் போட்டி நடைபெறும் போது இங்குள்ள முதலீட்டாளர்கள் கைத்தொழில் முயற்சியாளர்கள் போன்றோர் முன் அனுமதி பெற்று அவற்றைப் பார்வையிட்டு அக் கண்டுபிடிப்புகளை சந்தைப் படுத்தவும் முன்வர வேண்டும். மக்களும் அவ் உற்பத்திப்பொருட்களை வாங்கி உபயோகிக்க வேண்டும். அப்போதுதான் எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு ஆக்கபூர்வமானதொரு விஞ்ஞானக் கலாசாரத்தையும் வ்ளர்க்க முடியும். ❖

# அபகீர்த்தியை ஏற்படுத்தும் யுத்தத்தினை நிறுத்தி அரசியல் தீர்வுகாண வேண்டும்

## ஐ.தே.க., எம்.பி. திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச மட்டத்தில் எமது நாட்டுக்கு அபகீர்த்தியினை ஏற்படுத்தும் யுத்தத்தினை நிறுத்தி அரசியல் தீர்வினைக் காண வேண்டும். இதுவே பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கு சிறந்த வழியாகும். இதனை அரசாங்கம் உணர்ந்து கொள்வதாக இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலா ளரும் கண்டி மாவட்ட எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாதமும் அதன் செயற்பாடுகளும் ஏற்றுக்கொள்ளமுடியாதவை. அதற்காக சதா காலமும் யுத்தத்தைத் தொடர்ந்து இளைஞர் சமூகத்தைப் பலிக்கடாவாக்குவதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் கூறினார். படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் தீவிரமடைந்து வருவது குறித்து கேட்டபோதே திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாட்டினால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு நற்பெயரை இழந்துவிட்டது. மிக மோசமான மனித உரிமை மீறல்கள், ஊழல் மோசடிகள் மலிந்துவிட்ட எமது நாட்டுக்கு அபகீர்த்தியை சம்பாதித்துக் கொடுத்திருக்கின்ற பெருமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தையே சாரும்.

இதனால், சர்வதேச சலுகைகள் பின்னடைவைக் கண்டுள்ளன. நாடு பணவீக்கத்தாலும் விலைவாசி அதிகரிப்பாலும் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இவையனைத்துக்கும் யுத்தமே பிரதான காரணியாகும்.

பயங்கரவாதத்தையும் அதன் நாசகார செயற்பாடுகளையும் ஐக்கிய தேசியக்கட்சி எப்போதுமே வெறுக்கின்றது. அதேபோல் அநியாயமாக உயிர்கள் பலியெடுக்கப்படுவதையும் வளங்கள் நாசமாக்கப்படுவதையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்தத்தின் மீதும் அதன் அழிவுகள் மீதும் வெறுப்படைகின்ற, நிராகரிக்கின்ற மக்கள்; மூவினத்திலும் இருக்கின்றனர். இதில் ஒரு சிறு பிரிவினரே யுத்தத்தை ஆதரிக்கின்றனர்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்படுத்திக் கொண்டுள்ள அநாவசிய யுத்தத்தால் இரு தரப்பிலும் இளைஞர் சமுதாயம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசாங்கம் தனது மக்களையே அகதிகளாக்கிக் கொண்டிருக்கின்றது.

இன,மத, பேதம் அற்ற தன்மை என்பது பெயரளவும் பேச்சளவிலும் இல்லாமல் அதனை நடைமுறைப்படுத்திக் காட்டுவதே இன்றைய தேவையாகவும் இருக்கின்றது. பயங்கரவாதத்தை அழிப்பது என்ற காரணத்தைக் காட்டி சதாகாலமும் யுத்தத்தை தொடர அரசாங்கத்தினால் முடியுமா? எனக் கேட்க விரும்புகிறோம். யுத்தம் நிறுத்தப்படாத வரையில் எமது நாட்டின் எதிர்கால சந்ததியான இளைஞர் சமூகம் பலிக்கடாவாக்கப்படுவதைத் தடுக்க முடியாது. எதிர் காலத்தில் சனத்தொகை யில் பின்னடைவு, பொருளாதாரப் பின்னடைவு அபிவிருத்திப் பின்னடைவு என்ற நிலை உரு வாகி சர்வதேச மட்டத் தில் செல்வாக் கை இழந்து நிற் கும் நாடக இலங்கையை இட்டுச் செல் லும் அரசா ங்கத்தின் நடவ டிக்கைக்கு ஐக் கிய தேசியக் கட்சி இடம்கொடுக் காது.

யுத்தம் நிறுத் தப்பட வேண் டும். அரசியல் தீர்வொன்றுக்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இதனையே எமது கட்சி வலியுறுத் திக் கொண்டிருக்கின்றது. அதன் மூலமே ஏற்றுக் கொள்ள கூடிய நிரந்தரத் தீர்வொன் றினை எதிர்பார்க்கலாம். இதற்கு இருதரப்பும் உடன் பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. (அ-6)

## "அமைதியின் சொற்கள்" வீடியோ நிகழ்ச்சி



மகராஜி என்னும் கௌரவப் பெயரால் அழைக்கப்படும் பிரேம் ராவட் அவர்கள் தனது 3 வயதில் மக்கள் முன் உரையாற்ற ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை 45 வருடங்களுக்கு மேலாக உலகம் முழுவ தும் பிரயாணம் செய்து மக்களுக்கு ஓர் எளிமையான ஆனால் ஆழமான செய்தியினை வழங்கி வருகிறார்.

அவரது "அமைதியின் சொற்கள்" பற்றிய வீடியோ நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை9மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ)


# தொண்டு நிறுவனங்களை வெளியேற்றும் அறிவிப்பு சர்வதேச ரீதியில் அரசுக்கு நற்பெயரை ஏற்படுத்தும் !

## அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா

(கொழும்பு)

வன்னியில் செயற்படும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வரவேண்டும் என விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாது. இந்த நடவடிக்கை அரசின் நற்பெயரைச் சர்வதேசத்தில் மேலும் உயர்த்தும் என தகவல் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அமைச்சர் மேலும் கூறிய தாவது, அரசின் இந்த அழைப்பு சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு மட்டுமல்ல. அப் பிரதேசத்திலுள்ள அனைவருக்குமாகும். அப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கை இடம்பெறும் போது அபிவிருத்திப் பணி களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்வது அர்த்தமற்றது. இவர்களுக்கு ஏதாவது பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கு பொறுப்புச்சொல்ல வேண்டியது அரசேயாகும்.



இதுபோன்ற நிலைமைகள் ஏற்படும் முன்னர் அவர்களைப் பாதுகாப்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறு முன் அறிவித்தல் விடுத்துள்ளது.

இந்தியப் படையினர் வன்னி மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனரா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள் விக்கு பதிலளித்த அமைச்சர் இந்தியாவுக்கு இலங்கை அரசாங்கம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது.

இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதில்லையென பலரும் கருத்துத் தெரிவித்தனர். இது முற்றிலும் பொய்யானது. பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்குகிறது. நவீன ராடர் கருவிகளையும் இந்தியா வழங்யுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# புனிதமான சபையான பாராளுமன்றம் இன்று பிரேத அறையாக மாறிவிட்டது

## காமினி ஜயவிக்கிரம பெரேரா ஐ.தே.க. எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புனிதமான உயரிய சபையான பாராளுமன்றம் இன்று பிரேத அறையாக மாறிவிட்டது. கடந்த 8 மாதங்களுக்கு 6பேரின் பூதவுடல்கள் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. எம்.பி.யான காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் மலர் வளையம் வைக்கப்பட்டதன் பின்னரே எம்.பி.க்கள் பலியானார்கள் அல்லது மரணமடைந்தார்கள் என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றாடல் தொடர்பான சட்ட மூல விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மலர் வளையம் வைக்கப்பட்டதன் பின்னரே பாராளுமன்றம் பிரேத அறையாக மாறியது. அதற்கு பரிகாரம் தேடுவதற்காக பிரித் ஓதப்பட்டது. எனினும் அன்றே சபாநாயகருக்கு சிக்குன்குனியா காய்ச்சல் தொற்றிக் கொண்டது.

இவ்வாறான பிணிகளுக்கு தீர்வு காண்பதற்கு சகல மதங்களையும் இணைத்து பூஜையொன்று செய்ய வேண்டும்.

ஹெல உறுமயவினால் கொண்டுவரப்பட்ட சட்டத்தினால் பௌத்த தேரர்களே சிறைச்சாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பௌத்த மதம் இதர மதங்களை அடக்கி ஆளும் மதமல்ல என்பது பௌத்த தர்மத்திலேயே கூறப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தினால் இந்து,இஸ்லாம், பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு தங்களது மத வழிபாடுகளை உரிய முறையில் மேற்கொள்ள முடிவதில்லை.

பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதனால் ஒலி சட்டம் தொடர்பில் அதிகாரிகளுக்கு உரிய முறையில் தெளிவுபடுத்த வேண்டும்.

சுற்றாடலுக்கு அன்பு செலுத்த முடியாவிடின் எம்மால் எதனை பாதுகாக்க முடியும். எதன் மீது அன்பு செலுத்தப் போகின்றோம் என்பதனால் சட்ட மூலத்தின் மூலம் மத தலைவர்களுக்கும் மத வழிபாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும். (அ-6)

# வன்னி மக்களின் சுகாதார நிலை பெரிதும் பாதிக்கக்கூடிய அபாயம் நிலவுகிறது

## எம்.எஸ்.எப் தன்னார்வ தொண்டு நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

வன்னி மக்களின் சுகாதார நிலை பெரிதும் பாதிக்கப்படக்கூடிய அபாயம் நிலவுவதாக எம். எஸ்.எப். என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் உத்தரவிற்கு அமைய எம்.எஸ். எப். நிறுவனம் கடந்த 10ஆம் திகதி வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளது.

படையினருக்கும், விடுத லைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் உக்கிர மடைந்து வரும் நிலையில் பிரதேசத்தில் பாதிக்கப்டுள்ள மக்களின் சுகாதார நிலை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

யுத்தம் நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு இரு தரப்பினரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எம். எஸ். எப். வேண்டுகோள் விடுத்துள்ளது. எம்.எஸ். எப். தன்னார்வ தொண்டு நிறுவனமும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் பொதுமக்களிடம் கோரியுள்ள போதிலும் அதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

விமானத் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களுக்கு அஞ்சி தற்காலிக குடில்களில் வசித்துவரும் பெரும் எண்ணிக்கையிலான அப்பாவிப் பொதுமக்கள் மோசமான சுகாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக எம். எஸ். எப். தெரிவித்துள்ளது.

(அ-6)

# விடுதலைப்புலிகளின் கடற்படை வலு முடிவுக்கு வந்துள்ளது-கோத்தபாய



(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் தாக்குதல்கள் காரணமாக இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை வலு குறைந்துள்ளதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை வலு தொடர்பாக அதிகமான மதிப்பீ( மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கடற்படையினரால் அமைக்கப்பட்ட 'ஏரோ' என்ற 100 ஆவது தாக்குதல் படகை நேற்று முன்தினம் வெலிசல கடற்படைத்தளத்தில் பார்வையிட்ட போதே அவர் இந்தத் கருத்தை வெளியிட் டுள்ளார்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் ஆழ்கடலில் ஊடான ஆயுத விநியோகத்தை கடற்படையினர் முழுமையாக அழித்துள்ளனர். இது கடற்படையினரின் புதுவகையிலான உத்திகள் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதாகக் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (அ-6)

தியாக உணர்வு தோன்றிவிட்டால் எத்தகைய சங்கடங்களையும் கருதாமல் தமது இலட்சியத்தில் ஈடுபாடு கொண்டு செயலை திறம்பட முடிக்கும் பேராற்றல் ஏற்படும். –சுவாமி இராமதாசர்

வலம்புரி

# வன்னி யுத்தத்தால் தமிழர்களுக்கு பேரழிவு

வன்னியில் இடம்பெறும் யுத்தத்தினால் தமிழினம் பேரழிவைச் சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது விடயத்தில் தமிழ் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வன்னியில் இடம்பெறும் யுத்தம் மிகக் கொடூரமானது. விடுதலைப் புலிகளை தோற்கடிப்பது எனக் கூறினாலும் அதன் முடிவு–விளைவு தமிழின அழிவாக இருக்குமென்பதை எவரும் மறுக்க முடியாது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாவுக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு வருகின்ற மக்கள் தங்குவதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்படுவதான தகவல்கள் வேறு.

இங்கு வன்னியிலிருந்து மக்கள் இடம்பெயர்வது, வவுனியாவுக்கு வருவது, அங்கு தங்க வைப்பது என்பவற்றுக்கு மேலாக, வன்னியிலிருந்து வரும் மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தங்க வைத்தால் அவர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பதே இப்போதைய மிக முக்கியமான கேள்வியாகும்.

பொதுவாக வன்னியில் வசித்த ஒருவரை கண்டாலே சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் படைத்தரப்பு வவுனியாவில் தங்கவிருக்கும் வன்னி மக்களை எவ்வாறு நோக்கும் என்பது குறித்து யாரேனும் கவனம் கொள்வதாகத் தெரியவில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பில் வசித்தால் – தங்கியிருந்தால் அவர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகள் என்ற நோக்கு படைத்தரப்பிடம் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் யுத்தம் இடம்பெறும் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து சுமார் இரண்டு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியாவுக்கு வருகின்றபோது அந்த மக்கள் தொகையில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அடங்கியிருப்பர்.

அந்த இளைஞர்கள் மீதான படைத்தரப்பின் பார்வை எப்படியிருக்கும்? ஆக இரண்டு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வருகின்றனர் என்பது ஆறுதலான விடயமல்ல. அங்குதான் கடும் சிக்கல் ஏற்படவுள்ளது.

எனவே வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து வவுனியா நோக்கி மக்கள் இடம்பெயர்வார்களாயின் அவர்களை பொறுப்பேற்கும் பணியை – அவர்களின் உயிருக்கான உத்தரவாதத்தை ஐ.நா சபை போன்ற அமைப்புக்கள் ஏற்க வேண்டும்.

இல்லையேல் மிகப் பெரும் பயங்கரம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

# அவசரகாலச் சட்டத் திருத்தத்தினால் அடிப்படை உரிமைகள் பாதிப்பு

## உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தினால் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதுடன், நீதியற்ற செயல்களையும் ஊக்குவிப்பதாகக் கூறி மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இதில் பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். 2005ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தில் காலத்திற்குக்காலம் புதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதன்படி ஒருவரை கைதுசெய்து சுமார் ஒருவருட காலத்திற்குத் தடுத்துவைத்திருக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சட்டத்தின் 19ஆவது சரத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற ஒருவர் 90 நாட்கள் வரையில் தடுத்து வைக்கப்படலாம். எனினும் சிலர் ஒன்றரை வருடகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் புதிதாக அவசரகாலச் சட்ட நியமங்களில் சேர்க்கப்பட்டுள்ள விடயங்களைப் பிரதிவாதிகள் தரப்பு வெளிப்படுத்த வேண்டும் என மனுதாரரான மாற்றுக்கொள்கைகளுக்கான நிறுவனம் கோரியுள்ளது. (அ-6)

# வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ஆராய தெரிவுக்குழு அமைக்க வேண்டும்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா கோரிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தொடர்பில் ஆராய்வ தற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச் சர் தினேஸ் குணவர்த்தன கேட்டுக்கொண்டார்.

மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸ்ஸ நாயக்கா சபையில் நேற்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற நிதி முகாமைத்துவம் தொடர்பில் இந்தியப் பாராளுமன்றத்தின் முறமையை பின்பற்றுவது உகந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

வீடமைப்பு அமைச்சுக்கு மதிப்பிடப்பட்டிருந்த நிதியை விட குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமாரதிஸ்ஸ நாயக்க பாராளுமன்றத்தின் கவனத்திற்குக்கொண்டுவந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல்பெரேரா கொள்கைஅளவில் அனுரகுமார திஸ்ஸநாயக்காவின் கருத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக கட்சியின் தலைவர்கள் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும் என சபா நாயகர் டபிள்யு ஜே.எம்.லெக்குப்பண்டார தெரிவித் தார்.

இதேவேளை உயர் தரப்பரீட்சை மதிப்பீட்டுப்பணிகளில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டது. சட்டங்களை மேற்கோள்காட்டி ஆசிரியர்க ளின் பிரச்சினைகளுக்கு மேலோட்டமான தீர்வை வழங்க முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் எதிர்க்கட்சியின் பிரதமர் கொறடா கேட்டுக்கொண்டார். விடைத்தாள் மதிப்பீட்டுக்கு தகுதி பெற்றிருந்த ஆசிரியர்களில் 442 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் நேற்று முன்தினம் 1050 பேர் கலந்து கொண்டிருப்பதாக தெரிவித்தார்.(அ)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதம் அரசு 10 மில்லியன் மேலதிக செலவு

(கொழும்பு)

ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தினால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும்பணிகள் 20 நாட்களுக்கும் மேலாக தாமதமாகியிருப்பதன் காரணமாக அரசாங்கத்திற்கு 10 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்காக அரசாங்கம் 40 மில்லியன் ரூபாக்களை ஒதுக்குவதாகவும் இந்த வருடமும் இதே தொகையினை அரசாங்கம் ஒதுக்கிய போதிலும் ஆசிரியர்கள் சமுகமளிக்காமையினால் திட்டமிட்ட வகையில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறாததன் காரணமாக விடைத்தாள்களை மீண்டும் திணைக்களத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். நீதிமன்ற உத்தரவையடுத்து தற்போது ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். இதனால் மீண்டும் விடைத்தாள்களை மதிப்பீட்டு நிலையங்களுக்கு அனுப்பவேண்டியுள்ளது. அத்துடன் ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகளை ஒழுங்குசெய்ய வேண்டியுள்ளது. இவற்றுக்கு மொத்தமாக 10 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று அநுர எதிரிசிங்க குறிப்பிட்டார்.

நான்காம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 90 வீதம் வெற்றியடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர் சில ஆசிரிய தொழிற்சங்கங்கள் தற்போதும் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகளுக்கு அச்சுறுத்தல்களை விளைவிப்பதாகவும் தெரிவித்தார்.

### 25 பாடசாலைகள் மூடப்படவுள்ளன

இதேவேளை நீதிமன்ற உத்தரவையடுத்து உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் மீண்டும் நடைபெற வுள்ளதால் 25 பாடசாலைகள், இம்மாதம் 23ஆம் திகதி முதல் ஒக்டோபர் 5ஆம் திகதிவரை பகுதியளவில் மூடப்பட்டிருக்கும் என கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலைகளின் சில பிரிவுகளை மாத்திரமே நாம் மூடிவிடத் தீர்மானித்துள்ளோம். ஏனெனில் டிசம்பர் 8ஆம் திகதி க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை நடைபெறவுள்ளதால் அதற்கு மாணவர்களைத் தயார்படுத்த வேண்டியுள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டாலும் ஆசிரியர்கள் அனைவரும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

(அ-6)

## நூல் வெளியீட்டு விழா

**Visual Basic for Beginers** என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெறும்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணமும், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்வர்.

(ந-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### ஆளுமை வளர்ச்சியின் விதிமுறைகள்



தூல நியதிகளுக்குப் பின்னால், மிக நுண்ணிய நியதிகள் இருப்பது நமக்குத் தெரியும். அதாவது பௌதீக உலகம், மன உலகம், ஆன்மீக உலகம் என்று தனித்தனியாக அந்த உண்மைகள் இல்லை. இருப்பதெல்லாம் ஒன்றே. அது நுனி நோக்கிச் சிறுத்துச் செல்கின்ற கூம்பு வடிவம் போன்றது என்று ஒருவகையில் கூறலாம். அனைத்திலும் கனத்த பகுதி இங்குள்ளது. அது குவிந்து மென்மேலும் நுண்ணியதாகிச் செல்கிறது மிகவும் நுண்ணியதை நாம் உயிர் என்கிறோம்.

அனைத்திலும் தூலமானது உடல். சரியாக இங்கு பிண்டத்தில் (Microcosm) உள்ளது போன்றே அண்டத்திலும் (Microcosm) உள்ளது. நம் பிரபஞ்சமும் இதைப் போன்றே உள்ளது. பிரபஞ்சம் புறத்தேயுள்ள மிகவும் தூலமான பகுதி. இது ஒடுங்கி மேன்மேலும் நுண்ணியதாகி மிக நுண்ணியதாகி இறுதியில் இறைவனாகிறது.

# யாழ். உதைபந்தாட்ட வளர்ச்சியில் பார்வையாளர்களின் பங்களிப்பு அவசியம்

## யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ர்னிப்பிள்ளை கிளிபேட் உடன் சந்திப்பு

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வளர்ச்சியில் பார்வையாளர்களின் இடையூறுகள்- மோதல்களே பாரிய பிரச்சினையாகவுள்ளது என யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை கிளிபேட் தெரிவிக்கிறார்.



அத்துடன், யாழ்.மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கு (Coaches) முறையான பயிற்றுவிப்பாளர் அனுமதிப் பத்திரம் இல்லாமையால் வீரர்களுக்கு நுட்பங்கள், விதிகள் பயிற்றுவிக்கப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி உப அதிபருமான எஸ்.அன்ரனிப் பிள்ளை கிளிபேட் அவர் களுடன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டத்தின் வளர்ச்சி குறித்து சந்தித்தோம்.

அச்சந்திப்பில் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இங்கு தொகுத்து தரப்படுகின்றன. (ஆ-ர்)

யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் போது பார்வையாளர்கள் இடையூறுகளை ஏற்படுத்துவது அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக சரியான முறையில் உதைபந்தாட்ட விதிகளை அறிந்துகொள்ளாமல் போட்டி மத்தியஸ்தர்களின் தீர்ப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மைதானத்திற்குள் நுழைந்து மோதல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் போட்டிகள் பாதிக்கப்படுகின்றது.

எனவே பார்வையாளர்கள் உதைபந்தாட்ட விதிகளை நன்கு அறிந்து போட்டிகளை இடையூறு செய்யாமல் போட்டிகளுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமே யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்ட போட்டிகளை சீராக நடாத்த முடியும் என்பது எனது கருத்து.

உதைபந்தாட்டப் போட்டிகளின் போது பார்வையாளர்களின் இடையூறுகளை தடுக்கும் முயற்சியாக யாழ்.உதைபந்தாட்ட லீக், தகராறில் ஈடுபடும் அணி, அணி சார்ந்த ரசிகர்களை இனங்கண்டு அவ் அணிக்கு அபராதம் விதிக்கின்றது.

இதன் மூலம் பார்வையாளர்களின் இடையூறுகள் அண்மைக்காலமாக இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

எனினும் பார்வையாளர்கள் எப்போது இடையூறுகள் விள்ளவிக்காமல் சரியான முறையில் போட்டிகளை நடாத்த வழிசெய்கின்றார்களோ அப்போதுதான் யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்ட தொடர்களை உரிய முறையில் வெற்றிகரமாக நடாத்த முடியும்.

### பாடசாலை மட்டங்களில் உதைபந்தாட்டம் வளர்வதற்கு

பாடசாலை மட்டத்தில் உதைபந்தாட்டம் வளர்வதற்கு சிறந்த பயிற்சி மற்றும் பயிற்றுவிப்பாளர் அனுமதிப்பத்திரம் பெற்ற பயிற்றுவிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்து பயிற்றுவிப்பாளர் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

இச் சான்றிதழ்பெற்றுள்ள உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் யாழ்.மாவட்டத்தில் குறைந்த அளவிலேயே உள்ளனர்.

யாழ். விளையாட்டுகளம்

குறிப்பாக பாடசாலைகளில் உதைபந்தாட்டத்தின் அடிப்படை நுட்பங்கள் -திறன்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதனூடாகவே பாடசாலை மட்டத்தில் சிறந்த வீரர்களை உருவாக்க முடியும்.

எனினும் தற்போது உதைபந்தாட்டத்தின் அடிப்படை நுட்பங்கள் -திறன்கள் பயிற்றுவிக்கப்படுவது குறைவாகவே உள்ளது. இதற்கு சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

### மைதானம்

யாழ்.மாவட்டத்தில் 11பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளை நடாத்துவதற்கு சரியான அளவுத்திட்டமான மைதானங்கள் இல்லை.

துரையப்பா விளையாட்டு அரங்கு உள்ள போதும் அங்கு போட்டிகள் நடைபெறுவதில்லை. இதன் பொருட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் கோரிக்கைக்கு இணங்க சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் (FIFA) யாழ்.மாவட்டத்தில் சிறந்த உதைபந்தாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கு கடந்த 2005ஆம் ஆண்டு ஒன்றரைக் கோடி (15 மில்லியன்) ரூபாய் நிதியுதவி செய்தது.

இந்நிதியில் கோட்டைக்கு மேற்குப் புறமாகவுள்ள சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு அருகாமையில் வெளியில் உதைபந்தாட்டமைதானம் ஒன்றை அமைக்க திட்டமிட்டிருந் தோம்.

எனினும் திடீரென ஏற்பட்ட நாட்டுச் சூழலால் அப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள முடியவில்லை. எனவே யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு மைதானங்கள் அவசியமாகவுள்ளது.

அதற்கு அரசாங்கத்தினால் பிரதேசங்களிலுள்ள கழகங்களின் மைதானங்களை செப்பணிடுவதற்கு நிதியுதவி வழங்கப்படவேண்டும்.

### ஊடகங்களின் பங்கு உதைபந்தாட்டத்திற்கு தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்கள் யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்ற வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

வெளிநாட்டு வீரர்களின் திறமைகளையும் சாதனைகளையும் வெளிப்படுத்துவதனைப் போன்று எமது பிள்ளைகளின் திறமைகளையும் வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் யாழ்ப்பாண வீர, வீராங்கனைகளும் ஊக்குவிக்கப்படுவர்.

### அனுசரணையாளர்கள் முன்வரவேண்டும்

தேசிய அணியில் இடம்பெறக்கூடிய வீரர்கள் உள்ள போதும் யாழ்.மாவட்டத்தில் உதைபந்தாட்டத்தின் தரம் குறைந்துவிட்டது. காரணம் தொடச்சியாக போட்டிகள் நடாத்தப்பட்டு மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் ஒன்றை நடாத்த முடியாமல் உள்ளமையாகும். அவ்வாறு போட்டிகளை நடாத்தும் போது தான் உதைபந்தாட்ட வளர்ச்சி அடைவதுடன் வீரர்களின் திறமையும் வெளிக்கொணரப்படும்.

இவ்வாறு யாழ்.உதைபந்தாட்ட லீக்கோ, அல்லது கழகங்களோ சுற்றுத் தொடர்களை நடாத்துவதற்கு அனுசரணையாளர்கள் முன் வருவதில்லை.

குறிப்பாக பிரபல வர்த்தகர் இ.எஸ்.பி. நாகரட்ணம் மாத்திரம் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கி வருவதுடன் அவற்றின் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய் கின்றார்.

இதேபோன்று வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்கள், வர்த்தகர்களும் அனுசரணைப் பணிக்கு முன் வருவார்களாயின் மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்களை நடாத்த முடியும்.

### தேசிய அணிகளுடனான போட்டிகளில் யாழ்.அணிகள் வெற்றியீட்டியமை வரலாறு

1971ஆம் ஆண்டு காலப் பகுதியில் துரையப்பா விளையாட்டு அரங்கில் சிலோன் பொலிஸ் மற்றும் கொழும்பு அணிகள் வந்து யாழ்.அணிகளுடன் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்றன.

இப் போட்டிகளில் யாழ்.கழகங்களே வெற்றியீட்டியிருந்தமை வரலாறு ஆகும்.

அக்காலப் பகுதியில் யாழ்.மத்திய கல்லூரி அதிபராகவும் பின்னர் பலாலி ஆசிரியர் கலாசாலை அதீபராகவுமிருந்த இ.கனகலிங்கம், இ.கே.குமரையா, வைத்திய கலாநிதி பிலீப் ஆகியோர் தமது கடமைகளுக்கு மேலாக உதை பந்தாட்ட வளர்ச்சிக்கு பாடுபட்டவர்கள்.

இவர்களின் உழைப்பே அக் காலப்பகுதியில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட அணிக்கு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பை பெற்றுக் கொடுத்தது.

இந்தியாவின் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா அணிகளுடனும் மற்றும் ரஷ்யா, ஜேர் மனி ஆகிய வெளிநாட்டு அணிகளுடனும் யாழ்ப்பாண உதைபந்தாட்ட அணி போட்டிகளில் பங்கேற்றது. (தொடரும்)

சந்திப்பு:-
ஆர்.யூ.பாலமுருகன்
வி.கோபிகிருஷ்ணா

# அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றுடன் எமக்கு கடுமையான பிரச்சினை உள்ளது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றுடன் தமக்கு கடுமையான பிரச்சினைகள்



உள்ளன என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை மிகவும் உன்னிப்பாக அரசாங்கம் அவதானித்து வருவதுடன் தவறாக செயற்படும் நிறுவனங்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தயாராகி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வன்னியில் செயற்படும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியாத நிலையில் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேலும் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றுடன் எமக்கு கடுமையான பிரச்சினைகள் உள்ளன. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட பொய்ப்பிரசாரங்கள் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன. உணவு இல்லை என அவை கூறிவருகின்ற நிலையில் அரிசிச்சாக்குகள் பதுங்குகுழிகள் அமைப்பதற்கு பயன்படுத் தப்பட்ட புகைப்படங் களையும் நாம் காண்பித்துள்ளோம்.

சில சந்தர்ப்பங்களில் நன்கறியப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் சில விடுத லைப் புலிகளுக்காக வைத்தியசாலைகளை நடத்தி வந்தமையையும் கண்டுபிடித்துள்ளோம்.

நாம் அரச சார்பற்ற நிறுவனங்களை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். ஜனாதிபதியும் இவ்விடயத்தில் அக்கறை கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலும் ஜனாதிபதி பங்கேற்று இருந்ததுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆராய்ந்தோம் என்றார்.

(அ-6)

### எயார்டெல் நிறுவனம் இலங்கையில் தொலைத்தொடர்பு சேவையை ஆரம்பிக்கும்

எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கையில் தனது தொலைத்தொடர்பு சேவைகளை ஆரம்பிக்கப்போவதாக எயார்டெல் நிறுவனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் தொலைத்தொடர்பு சேவை களை வழங்கும் நிறுவனங்களுடன் பொது வான ஓர் உடன்பாட்டுக்கு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாகவே இலங்கையில் தனது சேவையை ஆரம்பிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக எயார்டெல் முன்னர் தெரிவித் திருந்தது. இலங்கையில் தொலைத் தொடர்பு சேவையினை வழங்கும் ஏனைய நிறுவனங்கள், எயார்டெல் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதற்கு மறுத்து வருவதாக எயார்டெல் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியான சஞ்சை கபூர் சில தினங்களுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்கு மறுப்புத்தெரிவித்துள்ள இலங்கையில் உள்ள டயலொக், மொபிடெல் ஹட்ச், டிகோ ஆகிய கையடக்கத்தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் ஒரே விதிமுறைகளின் கீழ் அனைவரும் சேவை யினை வழங்குவதில் எந்தப்பிரச்சினையும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள பார்தி எயாட் டெல் நிறுவனத்தின் தலைமை அதிகாரி மனோஜ் கோலி ஸ்ரீலங்காரெலிக்கொம்நிறுவனத்துடனும் ஏனைய உள்ளுர் சேவை வழங்குநர் களுடனும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். மிக விரைவில் ஒரு முடிவு ஏற்படும் என்றார்.

# தோனி ஆட்டத்தில் அனல் பறக்கும்; டெண்டுல்கர் நுட்பமாக கணித்து ஆடுவார்

## கில்கிறிஸ்ட் கூறுகிறார்

(புதுடில்லி)

இந்திய அணித்தலைவர் தோனி இந்த ஆண்டின் மிகச் சிறந்த ஒருநாள் வீரராக தேர்வு செய்யப்பட்டார். இதேபோல் டெண்டுல்கர் ஒருநாள் சர்வதேச அணி வீரராக தேர்வு செய்யப்பட்டார். இது பற்றி அவுஸ்திரேலிய வீரர் கில்கிறிஸ்ட் கருத்துத் தெரிவிக்கையில்,

டெண்டுல்கர் மற்றும் தோனி ஆட்டங்களை புள்ளி விபரங்களைக் கொண்டு ஒப்பிட முடியாது. இப்போதும் டெண்டுல்கர் சிறந்த வீரராகவே இருக்கிறார். சமீப காலத்தில் நடந்த ஒருநாள் போட்டிகளிலும் அவர் நன்றாக ஆடியிருக்கிறார்.

தோனி ஆட்டத்தில் அனல் பறக்கும். கணிக்க முடியாத அளவுக்கு ஆட்டம் இருக்கும். ஆனால் டெண்டுல்கர் நுட்பமாக கணித்து ஆடுவார். அழகாக ஆட்டத்தை வெளிப்படுத்துவார். ஆனால் தோனி சாதாரணமாக நின்று பதற்றமில்லாமல் ஆடுவார்.

அவர் சில பந்துகளை அடிப்பது மிக வித்தியாசமாக இருக்கும். சூழ்நிலைக்கு தகுந்த மாதிரி நின்று ஆடுகிறார். அணியையும் சிறப்பாக கொண்டு செல்கிறார். டெஸ்ட் அணித்தலைவர் பதவி இப்போதே தோனிக்குத் தேவையில்லை. அவர் சிறிது காலம் காத்திருப்பது நல்லது இவ்வாறு அவர் கூறினார். (5)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி இம்மாதம் இறுதி வாரத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றது.

2 பயிற்சி ஆட்டம் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் முதல் பயிற்சிப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி பெங்களூரில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்நிலையில் இந்தியா வரும் அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. அணியிலிருந்து சகல துறை வீரர் சைமண்ட்ஸ் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஷேன் வோட்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

சைமண்ட்ஸ் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை காரணமாக அவரை

### சைமண்ட்ஸ் நீக்கம்

அணியிலிருந்து அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை நீக்கியுள்ளது.

அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் கையில் காயம் ஏற்பட்டிருந்ததால் அவர் அணியில் இடம்பெறுவாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் காயம் குணமாகிவிட்டதால் அணியில் இடம்பெற்றுள்ளார்.

சுழற்பந்துவீச்சாளர் மெக்கையின் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அணிவிபரம் வருமாறு,

ரிக்கி பொன்டிங் (அணித்தலைவர்), மைக்கெல் கிளார்க் (துணைத்தலைவர்), பாலின்ஜர், ஸ்டூவெட் கிளார்க், ஹடின், ஹைடன், ஹசி, ஜாக்ஸ் ,ஜான்சன், ஹடிச், ஜோசன் சிரேஜா, பிரெட் லீ, மெக்கையின், பீட்டர் சிட்டில்; ஷேன் வோட்சன். (5)

# பராலிம்பிக்கில் பிரித்தானியா எழுச்சி

ஒலிம்பிக் போட்டியில் 19 தங்கம் வென்று நான்காவது இடத்தை பிடித்த பிரித்தானியா பராலிம்பிக்கில் எழுச்சி கண்டுள்ளது. இதுவரை 33 தங்கம், 20 வெள்ளி, 16 வெண்கலம் உட்பட 64 பதக்கம் வென்று இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சீனா (37 தங்கம்) தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது.


**பதக்கப்பட்டியலில் முதல் 10 நாடுகள்**

| இடம் | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 37 | 42 | 30 | 109 |
| 2 | பிரித்தானியா | 33 | 20 | 16 | 69 |
| 3 | அமெரிக்கா | 23 | 16 | 17 | 56 |
| 4 | உக்ரைன் | 15 | 10 | 17 | 42 |
| 5 | அவுஸ்திரேலியா | 14 | 18 | 17 | 49 |
| 6 | ரஷ்யா | 13 | 14 | 14 | 41 |
| 7 | ஸ்பெயின் | 12 | 17 | 14 | 43 |
| 8 | தென்னாபிரிக்கா | 12 | 01 | 04 | 17 |
| 9 | பிரேசில் | 10 | 08 | 10 | 28 |
| 10 | ஜேர்மனி | 09 | 17 | 14 | 40 |

# பீஜிங் பராலிம்பிக்கில் டாய்ட் மூன்றாவது தங்கம்

(பீஜிங்)

பராலிம்பிக் தொடரின் பெண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே நீச்சல் பிரிவில் தெனாபிரிக்காவின் நதாலியா டுடாய்ட் முதலிடம் வந்து, மூன்றாவது தங்கம் வென்றார்.



சீனத் தலைநகர் பீஜிங்கில் 13-வது பராலிம்பிக் போட்டிகள் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே நீச்சல் பிரிவில் பிரேசில் வீரர் டேனியல் டையர்ஸ் முதலிடத்தைப் பெற்றார்.

இவர் 2 நிமிடம் 52.60 வினாடிகளில் வந்து ஊனமுற்றோர்க்கான பிரிவில் புதிய உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்.

இதன் மூலம் தற்போதைய பராலிம்பிக் தொடரில் 4 தங்கம், ஒரு வெண்கலம் உட்பட மொத்தம் 5 பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

வெள்ளியை சீனாவின் ஹீ ஜுன் யுவானும், வெண்கலத்தை பாப்லோ சிமடெவிலாவும் கைப்பற்றினர்.

### டு டாய்ட் அசத்தல்

பெண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே பிரிவில் தென்னாபிரிக்க வீராங்கனை நதாலியா டு டாய்ட் 2 நிமிடம் 27.83 வினாடிகளில் கடந்து, தங்கம் வென்றார்.

இது பீஜிங் பராலிம்பிக்கில் அவர் கைப்பற்றும் மூன்றாவது தங்கமாகும். கனடாவின் ஸ்டீபனி டிக்சன் வெள்ளியையும் லூயிஸ் வாட்கின் வெண்கலத்தையும் வென்றனர்.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் கனடாவின் மைக்கேலி ஸ்டில்வெல் 36.18 வினாடிகளில் வந்து புதிய பராலிம்பிக் சாதனை படைத்தார்.

ஜப்பானின் டோமோமியமகி வெள்ளியையும், சுவிஸ்சர்லாந்தின் ஸ்மிட் பையா வெண்கலத்தையும் வென்றனர்.

### வலு தூக்குதல் தங்கம்

ஆண்களுக்கான 56 கிலோகிராம் வலு தூக்குதல் போட்டியில் எகிப்து வீரர் செரீப் அத்மான் 202.5 கிலோகிராம் தூக்கி புதிய உலக சாதனை படைத்தார்.

இவர் வெள்ளி வென்ற ஈராக்கின். ரசூல் மொக்சினை விட சுமார் 17.5 கிலோக்கிராம் அதிகம். (5)

# ஐ.சி.சி. விருது பெற்றமையை நினைக்கும்போது பெருமையாகவுள்ளது

## தோனி தெரிவிப்பு

(டுபாய்)

ஐ.சி.சி ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர் விருதைப் பெறும் முதலாவது இந்திய வீரர் என்பதை நினைக்கும்போது மிகவும் பெருமையாகவுள்ளது.

மகத்தான வீரர்கள் வரிசையில் எனது பெயரும் இடம்பெற்றுள்ளது இனிமையான அனுபவம் என்கிறார் அணித்தலைவர் தோனி. கிரிக்கெட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஐ.சி.சி சார்பில் விருது வழங்கப்படுகிறது.

இம்முறை கடந்த 2007 ஆகஸ்ட் 9 ஆம் திகதிமுதல் 2008 ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் வீரர்களின் செயற்பாடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

### முந்தினார் தோனி

டுபாயில் நடந்த விழாவில் ஐ.சி.சியின் ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர் விருதை அணித்தலைவர் தோனி பெற்றார்.

ஒருநாள் அரங்கில் நம்பர்-1 வீரரான இவர், விருதுக்கான காலத்தில் 39 ஒருநாள் போட்டிகளில் ஆயிரத்து 298 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

விக்கெட் காப்பாளராக 62 விக்கெட் வீழ்ச்சிக்கு (46 பிடி, 16 ஸ்ரொம்பிங்) காரணமாக இருந்துள்ளார். இதனடிப்படையில் விருதை வென்றார்.

ஒருநாள் போட்டிக்கான சிறந்த வீரர் விருது பெறும் வாய்ப்பை இம்முறை தோனியிடம் பறிகொடுத்தார் சச்சின்.


இதேபோல் வளர்ந்து வரும் இளம் வீரருக்கான விருதை பெறத் தவறினார் இஷாந் சர்மா. இவ் விருதை இலங்கையின் மென்டிஸ் தட்டிச் சென்றார்.

### யுவராஜ் விருது

இருபது -20 கிரிக்கெட்டில் சிறந்த வீரர் விருதை யுவராஜ்சிங் பெற்றார். இருபது -20 உலகக் கோப்பைத் தொடரில் இங்கிலாந்தின் ஸ்டூவெர்ட் பிராட் வீசிய ஒரே ஓவரில் 'தொடர்ந்து 6 சிக்ஸர்கள் விளாசிய இவர் விருதுக்கு தகுதியானவராக திகழ்ந்தார்.

### தோனி நன்றி

ஐ.சி.சி (சர்வதேச கிரிக்கெட் சபை) விருது கடந்த 2004 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.




ஒருநாள் போட்டிக்கான பிரிவில் பிளின்டொப் (இங்கிலாந்து 2004) கெவின் பீற்றர்சன் (இங்கிலாந்து 2005), மைக்கெல் ஹசி (ஆஸி. 2006), ஹைடன் (ஆஸி. 2007) சிறந்த வீரர் விருது வென்றுள்ளனர்.

இம்முறை சாதித்துள்ள தோனி ஒருநாள் போட்டிக்கான விருதுபெறும் முதலாவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றுள்ளார்.

இது குறித்து தோனி கூறுகையில்,

இவ்விருதைப் பெறும் முதலாவது இந்தியர் என்பதை நினைத்து பெருமையடைகிறேன்.

மகத்தான வீரர்களின் வரிசையில் நானும் சேர்ந்துள்ளது மிகவும் விசேடமான அனுபவமாக உள்ளது. இதற்காக ஐ.சி.சிக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

### சிக்ஸர் பதற்றம்

யுவராஜ் கூறுகையில், பரபரப்பான இருபது -20 உலகக் கோப்பை போட்டியின் போது ஸ்டூவெர்ட் பிராட் வீசிய ஓவரின் முதல் நான்கு பந்தில் 4 சிக்ஸர்கள் அடித்தேன்.

ஐந்தாவது சிக்ஸர் அடித்த பின்னர் எனது அடி வயிற்றில் பட்டாம்பூச்சி பறப்பதைப் போன்று பதற்றமாக இருந்தது.

இதனைச் சமாளித்து 6-வது சிக்ஸரை அடித்த தருணம் மறக்க முடியாதது என்றார்.

### ஐ.சி.சி. விருது வென்றவர்கள் (2008)

ஆண்டின் சிறந்த வீரர்-சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்), சிறந்த டெஸ்ட் வீரர் - டேல் ஸ்டைன் (தென்னாபிரிக்கா), ஒருநாள் போட்டி சிறந்த வீரர் - தோனி (இந்தியா), இருபது -20 சிறந்த வீரர் -யுவராஜ் (இந்தியா), வளர்ந்து வரும் இளம் வீரர் -மென்டிஸ் (இலங்கை), உறுப்பு நாட்டின் சிறந்த வீரர் - ரியான் டஸ்சேட் (நெதர்லாந்து), ஆண்டின் சிறந்த வீராங்கனை -சார்லட் எட்வர்ட்ஸ் (இங்கிலாந்து), சிறந்து கிரிக்கெட் உணர்வுக்கான அணி (இலங்கை), சிறந்த நடுவர் - சைமன் டாபெல் (ஆஸி.).

### டெஸ்ட் அணி

ஐ.சி.சி டெஸ்ட் போட்டிக்கான உலக லெவின் அணி வருமாறு, (துடுப்பாட்ட வரிசையில்)

கிரேம் சிமித்( தென்னாபிரிக்கா, அணித்தலைவர்), சேவாக் (இந்தியா), ஜெயவர்த்தன (இலங்கை), சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள் ), கெவின் பீற்றர்சன் (இங்கிலாந்து) கலிஸ் (தென்னாபிரிக்கா) சங்கக்கார (இலங்கை), பிரெட்லீ (ஆஸி.) ரியன் சைட்பொத்தம் (இங்கிலாந்து), டேல் ஸ்டைன் (தென்னாபிரிக்கா), முரளிதரன் (இலங்கை), ஸ்டூவெர்ட் கிளார்க்( ஆஸி.12-வது வீரர்).

### ஒருநாள் அணி

ஐ.சி.சி ஒருநாள் போட்டிக்கான உலக லெவின் அணி வருமாறு, (துடுப்பாட்ட வரிசையில்)

சச்சின் (இந்தியா), கிப்ஸ் (தென்னாபிரிக்கா), பொன்டிங் (ஆஸி. அணித்தலைவர்), யூனிஸ்கான் (பாக்.), சைமண்ட்ஸ் (ஆஸி.), தோனி (இந்தியா), மகரூப் (இலங்கை) விக்டோரி (நியூசிலாந்து), பிரெட் லீ (ஆஸி.) மிட்சல் ஜோன்சன்(ஆஸி.) நதன் பிரக்கன் (ஆஸி) சல்மான் பட் (பாகிஸ்தான் 12-வது வீரர்). (5)



வவுனியா கூட்டுப் படைத் தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வித்துடல்களுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இறுதி அஞ்சலி செலுத்தி, ஈகச்சுடர் ஏற்றுவதை படத்தில் காணலாம்.

# வன்னியிலிருந்து 2 இலட்சம்...

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திருமதி வி.கேதீஸ்வரன் ஆகியோரும் வவுனியா செயலக முக்கிய உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் சமுகமளித்திருந்தார்கள்.

இடம்பெயர்ந்து வருபவர்களுக்கான தற்காலிக தங்குமிட வசதிகள்–சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் தற்காலிக தங்குமிடங்களிலிருந்து அவர்களை மாற்றி வேறு நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பதற்குரிய ஏற்பாடுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக வவுனியா பதில் அரசாங்க அதிபர் நீக்கிலஸ்பிள்ளை தெரிவித்தார்.

வவுனியாவுக்கு வரும் மக்களை உடனடியாகத் தங்க வைப்பதற்காக 6 இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர்,

ஓமந்தை மகா வித்தியாலயம், காமினி மகா வித்தியாலயம், நெடுக்குளம் மகா வித்தியாலயம், நெடுக்குளம் நலன்புரி நிலையம், வவுனியா குட்செட் வீதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் உட்பட ஆறு இடங்கள் இடைத்தங்கல் முகாம்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இடம்பெயர்ந்து வரும் மக்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளை அளித்தல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உட்பட அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்காக 9 குழுக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாக இந்தக் குழுக்களில் அரச அதிகாரி ஒருவரும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் இராணுவ அதிகாரி ஒருவரும் அங்கம் வகிப்பார்கள் என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

இந்த முக்கிய கூட்டத்தில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம், உலக உணவுத் திட்டம், யுனிசெவ் போன்ற நிறுவனங்களும் ஐ.சி.ஆர்.சி. மற்றும் முக்கிய சர்வதேச உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொலிஸ், இராணுவத் தரப்பிலிருந்து வருகை தந்திருந்த அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள் என்று குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வன்னிப் பிரதேசத்திலிருந்து வெளியேறாமல் அங்கேயே தங்கியிருக்கும் மக்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள முக்கிய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் அரச அதிபர் நீக்கிலஸ் பிள்ளை தெரிவித்தார். (ந-5)

# அல்வாய் இளைஞனைக் கொழும்பில் காணவில்லை

(பருத்தித்துறை)

அல்வாயைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 21 ஆம் திகதி முதல் கொழும்பு வெள்ளவாய என்ற இடத்தில் காணாமல் போயுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாயை சேர்ந்த சிவஞானம் பார்த்தீபன் (வயது 24) என்ற இளைஞனே காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவாய்ப் பகுதியில் தங்கியிருந்து உறவினர் ஒருவரின் வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் குறித்த இளைஞன் கடந்த 21ஆம் திகதி அல்வாயிலுள்ள தமது குடும்பத்தினருக்கு பணம் அனுப்ப வங்கிக்குச் சென்றுள்ளார்.

அவரால் வங்கிமூலம் அனுப்பப்பட்ட பணம் குடும்பத்தினருக்கு கிடைத்துள்ள போதும் அவர் இதுவரை வீடு திரும்பவில்லை என யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் உறவினர்களால் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-52)

# காலியில்...

யோகத்தில் குறித்த மூன்று பேரும் உயிர் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிர் இழந்த சிறைக் கைதிகள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)


V4 Educational Consultancy (Pvt) Ltd.

Admission 2008 - Sona College of Engineering

கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் எமது பிரதிநிதியினால்

13-09-2008 தொடக்கம் 20-09-2008 வரை உடனடி அனுமதிகள் (Spot Admission) எமது யாழ் அலுவலகத்தில் நேரடியாக வழங்கப்படுகிறது.

Eligiblity

A/L 3 Pass or Pending Results

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை

இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு

0773867257 (Jeyakanth)

0774366711

0775936343 (Elankeethan)

0212228374

V4 Educational Consultancy

இல: 274, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம்


# புலிகளின் இரு யுத்த விமானங்களையும்...

சோனிக் விமானத்தினைச் செலுத்தக் கூடியவர்களால் அன்றி அவ்வாறு தாழப் பறந்து சிறிய ரக விமானங்களைச் செலுத்த முடியாது எனவும் புலிகளின் விமானங்களைப் பின்தொடர்ந்து சென்ற எவ்-7 விமானத்தின் விமானி, விமானப் படைத் தலைமையகத்திற்கு அறிவித்துள்ளதாக குறிப்பிடும் பாதுகாப்பு ஆய்வாளர் தனது பத்தியில் மேலும் தெரிவிக்கையில்,

இதன் காரணமாக நன்கு இராணுவப் பயிற்சியும் அனுபவமும் கொண்ட வெளிநாட்டைச் சேர்ந்த விமான ஓட்டிகள் எவராவது புலிகளின் விமானத்தைச் செலுத்தி வந்திருக்கலாம் எனப் பாதுகாப்புப் படையினர் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வவுனியாப் படைத் தலைமையகம் மீது தாக்குதல் நடாத்திவிட்டுப் புலிகளின் இரு விமானங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பினை ஏற்படுத்தியவாறே கிளிநொச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ஆனால் திடீரென்று ஒரு விமானத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. இதனையடுத்து உடனடியாகப் புலிகளின் மற்றுமொரு விமானத்தின் விமானி, சக விமானத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாகக் கிளிநொச்சிக்குத் தெரியப்படுத்தினார்.

பின்னர் விடுதலைப்புலிகள் தமது வானொலித் தொடர்பாடல் வலயமைப்பின் மூலம் தமது விமானம் ஒன்று எங்காவது வீழ்ந்துள்ளதா? என்பது பற்றி கண்டறியுமாறு தகவல் பரிமாறியதை படையினர் ஊடறுத்துக் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வான் பரப்பிலிருந்து தெற்கு நோக்கிப் புலிகளின் விமானங்கள் வந்து கொண்டிருப்பது அதிகாலை 3.26 மணிக்கு இந்திரா-2 எனும் ராடரில் தென்பட்டது.

உடனடியாக கொழும்பிலுள்ள விமானப் படைத் தலைமையகத்திற்கு வவுனியா விமானப் படைத் தளத்திலிருந்து தகவல் அனுப்பப்பட்டது. விடுத்லைப்புலிகளின் முதலாவது விமானம் ராடரில் இனங்காணப்பட்டு 8 நிமிடங்களின் பின்னர் அவற்றைத் தேடி அழிக்கும்பொருட்டு கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திலிருந்து எவ்-7 சுப்பர் சொனிக் விமானங்கள் புறப்பட்டன.

சுமார் 6 நிமிடங்கள் வவுனியா வான் பரப்பில் வட்டமிட்ட புலிகளின் இரு விமானங்களில் ஒன்று முல்லைத்தீவை நோக்கியும் மற்றொன்று கிளிநொச்சியை நோக்கியும் பறந்து சென்றன.

இதேசமயம் இரணைமடுவிலும் புதுக்குடியிருப்பிலும் அமைந்துள்ள புலிகளின் விமான ஓடு பாதையை எவ்-7 விமானங்கள் குண்டு வீசி தாக்கியழித்தன. இதேவேளை அதிகாலை 3.50 மணியளவில் முல்லைத்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகளின் ஒரு விமானத்தை பின் தொடர்ந்து சென்ற எவ்.-7 விமானம் அந்த விமானத்தின் மீது தாக்குதல் நடாத்தியதாகவும் இதனையடுத்து சில விநாடிகளில் புலிகளின் விமானம் தீப்பற்றியவாறு காட்டினுள் விழுந்ததாக விமானப் படை விமானி அறிவித்திருந்தார்.

புலிகளின் விமானம் ஒன்றினை வெற்றிகரமாகத் தாக்கி அழித்துவிட்டதாக விமானப் படை விமானி விமானப் படைத் தலைமையகத்திற்கு உடனடியாக அறிவித்ததாகவும் இதற்கிடையில் தமது இரு விமானங்களும் தாக்கு தல் நடாத்திவிட்டுப் பாதுகாப்பாகத் திரும்பி விட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருந்ததையும் பாதுகாப்பு ஆய்வாளர் சுனில் ஜெயசிறி தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளார். (ந-5)


திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் சுபமங்களகரமான சர்வதாரி வருடம் ஆவணி மாதம் 29ம் நாள் (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 10.25 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும் துலா இலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது திருநிறைச் செல்வன் நகுலேஸ்வரன் அவர்களுக்கும்



எமது திருநிறைச் செல்வி ஜெனிதா அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு ஆனைக்கோட்டை துரை ஐயா திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி விக்னேஸ்வரன் குடும்பம், 'மதிஒளி', உடுவில் தென்கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

திரு. தனஞ்செயன் குடும்பம், சிலம்புப்புளியடி வீதி, சங்கானை.

(இருவீட்டார் அழைப்பு) (C-1537)


# கப்பூது உப்புவெல்ல வீதியில்...

ருக்கலாம் எனவும் நேற்று முன்தினமே கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் விசாரணைகளில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற பருத்தித்துறை மேலதிக நீதவான் ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா பிரேத பரிசோதனைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் உறவினர்களால் அடையாளம் காணும் பொருட்டு சடலத்தை ஐந்து நாள்களுக்குப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பிரேத அறையில் வைக்குமாறும் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் கப்பூது கிராம சேவையாளருக்கு நீதவான் பணிப்புரை விடுத்தார்.

சடலத்தை அடையாளம் காண பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினரோடு அல்லது பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளரோடு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சடலம் காணப்பட்ட கப்பூதுக்கு அண்மையாகவுள்ள மண்டான் பகுதியிலிருந்து கடந்த 5 ஆம் திகதி வெட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-52)

# சர்வதேச...

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் மெட்டி ஜெவிக் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தமது நிறுவனம் தொடர்ந்தும் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நிறுவனங்களுக்கு இடையிலான தரக்குழுவின் கணிப்பீட்டின்படி முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பொது மக்கள் உள்ளக இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# தொண்டு நிறுவனங்களை வழி...

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறுவது நியாயமா? எனக் கேள்வி எழுப்பியவாறு கிளிநொச்சியில் உலக உணவுத் திட்ட அலுவலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஒன்று திரண்ட மக்கள் அவர்களின் அலுவலக வாசலில் கூடி அவர்களை வெளியேற விடாது தடுத்தனர்.

அத்துடன் ஏனைய தொண்டு நிறுவன வாகனங்கள் வெளியேற முற்பட்டபோது அவர்களையும் அப்பகுதி மக்கள் வீதியில் மறித்து வைத்துள்ளனர்.

தமக்கு வன்னியிலிருந்து செல்ல விருப்பமில்லை எனவும் ஆனால் தமது தலைமையகம் அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் வெளியேறப் பணித்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையப் பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்குத் துணை போவது போன்று இந்த வெளியேற்ற நடவடிக்கை இருப்பதாக மக்கள் தெரிவித்தபோது, தாம் இதனை தமது உயர்பீடத்திற்கு உடனடியாகத் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்பீடம் அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச்சில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் மக்கள் அவர்களைச் செல்ல விட மாட்டோம் என்று உறுதிப்படத் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து முற்றுகைப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.